
உ
சிவமயம்


# சைவநீதி
SAIVANEETHI

மலர் 20 | துர்முகி தை - பங்குனி | 2017-Jan. - Mar. | இதழ் 10-11-12




## தீர்த்த யாத்திரைச் சிறப்பிதழ்





ரூபா.50/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதழ் வெளிவர அனுசரணை
கொழும்பு திரு. கருணானந்தன்



சிதம்பரம்

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆன்மாவின் இரண்டற்ற நிலை | 02 |
| காசித் தீர்த்த யாத்திரை | 04 |
| வயாவிளான் ஞானவைரவர் ஆலயத்தின் சிறப்பு | 11 |
| திருவைந்தெழுத்தின் சிறப்பு | 14 |
| திருக்குறள் கதைகள் -சொல் | 18 |
| யாப்பிலக்கணம் | 23 |
| சைவசமய வினாவிடை | 26 |
| இயற்பகை நாயனார் | 27 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு உரை விளக்கம் | 29 |
| சைவசமய விழுமியங்கள் | 33 |
| காலத்தால் மிக முந்திய சித்தாந்த சாத்திரம் | 36 |
| நினைவிற் கொள்வதற்குரிய வளிபாட்டு நாட்கள் | 39 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

# சைவநீதி

மலர் 20 துர்முகி தை, மாசி, பங்குனி. சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் இதழ் 10, 11, 12

**தொடக்குனர்:**
கலாபூஷணம்,
ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி,
வித்துவான்
**திரு. வ. செல்லையா**

**ஆலோசகர்**
கலாபூஷணம்,
சைவப்புலவர்
**திரு. சு. செல்லத்துரை**

**ஆசிரியர்**
சைவப்புலவர்,
சித்தாந்தச்செம்மணி.
**திரு. செ. நவநீதகுமார் M.A.**

**விநியோகம்**
சித்தாந்தரத்தினம்
**திருமதி. பத்மினி ராஜேந்திரா**

**வெளியிடுவோர்**
திருவாவடுதுறை ஆதீனம்
சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர்
கொழும்பு.

No. 4A, 1st Lane,
Ratmalana.
Tel: 0779 008 286

## தீர்த்தயாத்திரை

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினற்கு
வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

பிறவித்துன்பத்தை நீக்கிப் பேரின்பத்தைப் பெறுவதற்கு இறை வழிபாடு இன்றியமையாததாகும்.

எங்கும் நிறைந்த பரம்பொருள் உயிர்களுக்கு அருள் புரிதற் பொருட்டு திருத்தலங்களில் எழுந்தருளியுள்ளார். அந்த மூர்த்தியைத் தரிசிக்கத் திருத்தலத்திற்குச் செல்லுவதைத் தீர்த்தயாத்திரை எனக் குறிப்பிடுவர். தலத்தோடு தீர்த்தமும் இணைந்து இருப்பதாலும், மூழ்குபவரின் பாவம், வினை நீங்கி பரிசுத்தமடைவதாலும் தலயாத்திரை, தீர்த்தயாத்திரை எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

"சென்றாடு தீர்த்தங்களானார் தாமே" (6-78-1)
என்று அப்பர் பெருமான் குறிப்பிடுவார்.

நாம் தேடிச் சென்று ஆடுகின்ற தீர்த்தங்கள்களாக இறைவன் இருக்கிறான். மூர்த்தி, தலம், தீர்த்த வடிவில் இருந்து வழிபடல், தங்குதல், ஆடுதல் என்பவற்றை ஏற்று அருள் புரிகிறான் இறைவன் என்பதையே இவ்வண்ணம் அப்பரடிகள் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

"ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்" என்று திருவெம்பாவையில் மாணிக்கவாசகர் குறிப்பிடுவதையும் காணலாம். பிறவிப்பிணி நீங்கத் தீர்த்தயாத்திரை அவசியமாகின்றது.

எமது பயிற்சி மையத்தினர் இவ்வருடம் வடஇந்திய யாத்திரையில், திரிவேணிசங்கமம், சரயுநதி, கங்காநதி, இராமேஸ்வரத்தில் அக்கினி தீர்த்தத்திலும் ஏனைய இருபத்திரண்டு தீர்த்தங்களிலும் நீராடி வழிபடும் பேறு பெற்றனர். இவ்விதழ் தீர்த்த யாத்திரைச் சிறப்பு மலராக வெளிவருகிறது. யாபேரும் வாசித்துப் பயனடைய வேண்டுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மாவின் இரண்டற்ற நிலை

அரசன் கட்டளைப்படி குதிரை வாங்குவகற்காக மாணிக்கவாசகர் செல்கிறார். திருப்பெருந்துறையில், குருந்த மரத்தடியில், குருமூர்த்தியாக இறைவன் எழுந்தருளி இருக்கிறான். அவனைக் கண்டதும் மாணிக்கவாசகர் தன்னை இழந்து பணிகிறார். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு உபதேசம் பெறுகிறார்.

ஆட்கொண்ட சிவபெருமான் மணிவாசகப் பெருந்தகையின் சிந்தனையை தனக்குரியதாகச் செய்தான். கண்களையும் வழிபாட்டையும் தனது திருவடி மலருக்காய் ஆக்கினான். வாக்கைத் தன் புகழ் பேசுவதாகச் செய்தான். ஐம்புலன்களும் அவனை அனுபவிக்கும்படி ஆட்கொண்டு உள்ளத்துள் பகுந்தான். இவ்வாறு கூறும் மணிவாசகர் அவனை *அமுதக்கடல்* என்றும் *மலை* என்றும் வர்ணிக்கிறார். சிவன் *தன்னைத் தாந்தான் என்றும்,* அவன் *செந்தாமரைக் காட்டை ஒத்த தனிச் சுடர்* என்றும் போற்றுகிறார். தன்னை ***'இரண்டுமில் தனியனேன்'*** என்கிறார்.

***'சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்***
***கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி***
***வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்***
***மணிவார்தைக் காக்கிஐம் புலன்க ளார***
***வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்***
***மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்***
***தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்***
***தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே'***

'இரண்டுமிலி' என்ற தொடருக்கு உரையாசிரியர்கள் ஒவ்வாரு விளக்கம் தருகின்றனர். 'இம்மை, மறுமை' 'இரண்டுமற்ற', 'இகம், பரம் இரண்டுமற்ற', 'கரணங்களை ஒடுக்குதல், கரணங்களை வழிபாட்டுக்கப் பயன்படுத்தல் ஆகிய இரண்டு நெறிகளையும் அறியாத' போன்ற விளக்கங்களைத் தருகின்றனர். இவை அவரவர் அறிவுக்கும் அனுபவத்துக்கும் ஏற்பத் தரப்படுகின்றன.

திருமுறைகளுக்கு விளக்கம் காண்பதற்கு அல்லது உரை எழுதுவதற்கு சைவசித்தாந்த அறிவு மிகவும் அவசியம். இல்லையேல் தரப்படும்விளக்கம் தவறானதாக இருக்க நேரிடும். இதனாலேயே திருமுறைகளுக்கு உரை எழுதுவதைத் தவிர்க்க வேண்டுமென்று முன்னர் கருதப்பட்டது.

திருவாசகத்தில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பலவுண்டு. 'இது எனது உடம்பு' என்று கூறும்போது, நான் வேறு உடம்பு வேறு என்று உணர்கிறோம். 'நான்' என்பது எனது உடம்பல்ல; எனது அங்கமல்ல; அது ஆன்மா. இது சைவத்தின் தத்துவக் கருத்து. 'தனியனேன்' என்று மேற்கண்ட பாடலில் குறிப்பிடப்படுவது மாணிக்கவாசகரான ஆன்மாவையே என்று அறிய வேண்டும். இச் சொல்லாட்சி, தான் தனித்து நிற்கிறேன் என்பதை உணர்த்துகிறது.

***'இரண்டுமிலித் தனியனேன்'*** என்று திருவாசகம் சொல்வது போல் சைவசித்தாந்த நூலான சிவஞானபோதம் ***'இரண்டலா ஆன்மா'*** என்று கூறுகிறது. உண்மை விளக்கம் என்ற நூல் ***'இரண்டும் அற்ற நிலை'*** என்று ஆன்மாவின் நிலையை விளக்குகிறது சித்தாந்த நூல்கள் சொல்லும் ஆன்மாவின் இரண்டற்ற நிலை குறித்துச் சிந்திப்பது பயனுள்ளது.

இந்திய தத்துவங்களில் **சத் (சத்து), அசத் (அசத்து)** என்ற இரு சொற்கள் காணப்படுகின்றன. இவை குறித்த விளக்கங்களும் அவற்றில் வேறுபடுகின்றன. உள்பொருள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்பொருள்; நிலையானது, நிலையற்றது; என்ற கருத்தில் விளக்கங்கள் தரப்படுகின்றன. சைவசித்தாந்தம் மாற்றமடையாத நிலையான ஒன்றையே சத் எனக்கொள்கிறது. இது இறையாகிய சிவம் ஒன்றே என்பது சைவத்தின் கொள்கை. மாற்றமடையும், நிலையற்ற, உலகப் பொருட்களெல்லாம் அசத் எனக் கொள்ளப்படுகின்றன.

சைவசித்தாந்தம் அனைத்துப் பொருட்தளையும் மூன்றாக வகுத்துள்ளது. ஒன்று இறை அல்லது கடவுள். கடவுள் ஒன்றுதான். இரண்டாவது உயிர் அல்லது ஆன்மா. இது பலவாக உள்ளது. மூன்றாவது உலகமும் உலகப் பொருட்களும் அவை தொடர்பானவையும். இவை உயிருக்குக் கட்டாக அல்லது தளையாக உள்ளன. இந்த மூன்று பிரிவுகளும் இறை, உயிர், தளை எனும் முப்பொருளாக உள்ளன. இவற்றை, முறையே, பதி, பசு, பாசம் என்பர். இவற்றில் பதி சத்; பாசம் அசத்.

பசுவாகிய உயிரை சத்தென்றோ அசத்தென்றோ கொள்ள முடியாதிருக்கிறது. உயிர் எதனைச் சார்ந்திருக்கிறதோ அதன் தன்மையைக் கொண்டிருக்கிறது. ***'சார்ந்ததன் வண்ணமாதல்'*** அதன் இயல்பு. சத்தைச் சார்ந்து சத்துப்போல் இருக்கும். ஆனால் அது ச்ததல்ல. அசத்தைச்சார்ந்து அசத்துப்போல் இருக்கும். ஆனால் அது அசத்தல்ல. இங்ஙனம் சத்துமின்றி அசத்துமின்றி, தனிப் பொருளாக இருப்பினும் ஆன்மாசத்தாகிய இறையையும் அசத்தாகிய பொருட்களையும் அறியும் திறமை கொண்டது. இதனை **'இரு திறன் அறிவுளது இரண்டலா ஆன்மா'** என்று சிவஞானபோதம் ஏழாம் சூத்திரம் விளக்குகிறது. **'இரண்டுமிலித் தனியனேன்'** என்று கூறி மாணிக்கவாசகர் விளக்குகிறார்.

ஆன்மாவின் இரண்டுமற்ற நிலையை **உண்மை விளக்கம்** வேறொரு வகையில் விளக்குகிறது. குருடனின் கண்ணில் படலம் (cataract) இருந்துமறைக்கும் போது அவனால் ஞாயிற்றின் ஒளியைக் காணமுடியாது. படலம் நீங்கியதும் அவன் ஒளியைக் காண்கிறான். இங்கே கண், ஒளியைநாடிச் செல்வதுமில்லை; ஒளி, கண்ணைத் தேடி வருவதுமில்லை. படலம் நீங்கியதும், ஒளியின்முன் இருள் நில்லாமையால் கண் ஒளியில் கலந்துநிற்கிறது. இது போன்றே உயிரை மறைத்து நிற்கும் ஆணவ மலம் நீங்கியதும் அது சிவனின் திருவருளில் தோய்ந்து பேரின்பம் பெறுகிறது.

இதிலிருந்து ஒரு உண்மையை உணரலாம். முத்தி நிலையில் சிவபெருமான் உயிரிடம் வந்து கூடுவதுமில்லை; உயிரும் சிவனைச் சென்று கூடுவதுமில்லை. உயிருடன் சேர்ந்துள்ள ஆணவமலம் நீங்கும்போது சிவனுடனான சேர்க்கை இயல்பாகவே நிகழ்கிறது. இதனை விளக்கும் உண்மைவிளக்கப் பாடல் (48) வருமாறு:

**'சென்றிவன்றா னொன்றிற் சிவபூ ரணஞ்சிதையும்**
**அன்றவன்றா னொன்றுமெனி லந்நியமாம் - இன்றிரண்டும்**
**அற்றநிலை யேதென்னி லாதித்த னந்தன்விழிக்**
**குற்றமற நின்றதுபோற் கொள்'**

இங்கே ஆன்மாவின் இரண்டும் அற்ற நிலை என்பது ஆன்மா இறைவனைக் கூடுதலுமின்றி, இறைவன் ஆன்மாவைக் கூடுதலுமின்றி நிற்கும்நிலை. இந்த நிலையையும் சிவஞானபோதம் கூறும் 'இரண்டலா ஆன்மா' என்ற கருத்தையும் 'இரண்டுமிலி தனியனேன்' என்ற திருவாசகத்தொடர் குறிப்பது சிந்தனைக்குரியது.

சித்தாந்தரத்தினம், கலாநிதி க. கணேசலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசித்தீர்த்த யாத்திரை

**"காசியைக் குறித்துச் செல்லும் கால்களே கால்களாகும்**
**காசியை வழுத்தும் நாவே நாவெனக் கழறு லாமால்**
**காசியின் கதைகள் கேட்கும் செவிகளே செவிகள் ஆகும்**
**காசியை இனிது காணும் கண்களே கண்களாமால்."** - காசி கண்டம்

சைவசமயத்தவர்கள் தங்கள் வாழ்வில் சிவத்தலயாத்திரை செய்ய வேண்டியது முக்கியமாகும். சிவத்தலயாத்திரையின் பேறாகக் காசித்தீர்த்த யாத்திரை கைகூடும் என்பது பெரியோர் வாக்கு.

திருவாவடுதுறை ஆதீன திருமுறை, சைவசித்தாந்தக் கொழும்புப் பயிற்சிமையத்தினர் கடந்த நான்கு ஆண்டுகளாக ஈழத்திலும், தமிழ்நாட்டிலும் செய்துவந்த சிவத்தல யாத்திரையின் பேறாக இவ்வாண்டு காசித்தீர்த்த யாத்திரை கைகூடியது. திரிவேணி சங்கமம், காசி, காயா, அயோத்தி, ஹரித்துவார், ரிஷிகேசம், இராமேஸ்வரம் எனும் புனித தீர்த்தங்களை மையமாகக் கொண்டு 23.01.2017 தொடக்கம் 05.02.2017 வரை பதினைந்து நாட்கள் இத் தீர்த்த யாத்திரை மேற்கொள்ளப்பட்டது.

பயிற்சிமைய இயக்குநர் சைவப்புலவர் செ. நவநீதகுமார் அவர்களது தலைமையில் பயிற்சிமைய ஆசிரியர்களின் அறிவுரைகளோடு 13 ஆண்களும் 22 பெண்களுமாக 35 பேர் இத்தீர்த்த யாத்திரையை மேற்கொண்டோம். இணைப்பாளர் சிவத்திரு இரத்தினசபாபதி அவர்கள் வழமைபோலப் போக்குவரத்து, தங்கும் இடவசதி, உணவு வசதி, வழிபாட்டு ஒழுங்குகள் எல்லாவற்றையும் செய்து வழிகாட்டிக் கொண்டிருந்தார்.

முன்கூட்டியே யாத்திரைத்தலங்கள் பற்றிய விபரங்களும், மேற்படி தலங்களில் ஓதவேண்டிய திருமுறைப்பாடல்களும், கால அட்டவணைகளும் அச்சிட்டு எல்லோர்க்கும் வழங்கப்பட்டன. பெண்கள் எல்லோரும் சேலை உடுத்து, கொண்டைக்குப் பூச்சூடி, விபூதி பொட்டு, உருத்திராக்கம் பூண்டு மங்கல மங்கையராயும், ஆண்கள் எல்லோரும் வேட்டி சால்வை அணிந்து விபூதி, பொட்டு, உருத்திராக்கம் அணிந்து சிவனடியார் போலவே யாத்திரையில் கலந்து கொண்டனர்.

ஆசிரியர்கள் தீர்த்தவிசேடம், தலவிசேடம் பற்றி அவ்வவ்விடங்களில் விளக்கம் அளித்துக் கொண்டே இருந்தனர்.

இந்தத் தீர்த்த யாத்திரையின் விபரங்களை, யாத்திரை செய்தோர் என்றும் நினைந்து வழிபடும் பொருட்டும், இனிமேல் யாத்திரை செய்வோர் முன் கூட்டியே அறிந்து பயன் பெறும் பொருட்டும் ஓரளவு விளக்கமாகத் தருகின்றோம்.

## புதுடெல்லி

23.01.2017 அன்று இரவு கட்டுநாயக்காவிலிருந்து விமானமூலம் சென்னை போய் அங்கிருந்து விமானமூலம் புதுடெல்லி சென்றோம்.

24.01.2017 அன்று பகல் சொகுசு பேருந்தில் இந்தியாகேட், மகாத்மாகாந்தி நினைவிடம், இந்திராகாந்தி நூதனசாலை, இந்திய பாராளுமன்றம், குதுப்மினார் என்னும் 247அடி உயரமான மலையில் உள்ள பழம்பெரும் மாளிகை முதலான இடங்களைப் பார்த்துக்கொண்டு இரவு அலகாபாத் நோக்கி இரயிலில் பயணமானோம்.

## திரிவேணி சங்கமம்

25.01.2017 அலகாபாத் எனப்படுவது அக்பர் சக்கரவர்த்தி ஒருபோரில் வெற்றி பெற்றதன் நினைவாக அல்லாஹ்பாத் – அல்லாவின் மாளிகை எனும் பெயரில் கட்டிய நினைவு மாளிகையைக் குறித்த பெயர் அலகாபாத் என வழங்கப்படும் நகரமாகும். இரண்டு கி.மீ. தூரம் நடந்து சென்று திரிவேணி சங்கமம் எனப்படும் கங்கைக் கரையை அடைந்தோம். திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் மூன்று. வேணி என்றால் கங்கை. ஆகவே கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று புனித நதிகள் கலக்குமிடம் ஆதலால் திரிவேணி சங்கமம் எனச் சொல்லப்படுகிறது. அங்கு கங்கை வடக்கிலிருந்து தென்கிழக்கு நோக்கி கலங்கிய வெள்ளை நிறத்திலும், யமுனை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிக் கருநீல நிறத்திலும் வந்து கலக்கின்றன. சரஸ்வதி பாதாள கங்கையாகக் கீழிருந்து வந்து கலக்கிறது. அந்தச் சங்கமத்தில் தீர்த்தமாடிய ஆனந்தம் சொல்லில் அடங்காது.

கங்கைக்கரையில் மொட்டையிட்டுச், சங்கற்பம் செய்து தம்பதி பூசையும் செய்துகொண்டு கங்கையில் 1 கி.மீ. தூரம் வள்ளத்தில் சென்று பிரவாகித்து ஓடும் சங்கம தீர்த்தத்தில் இராமேஸ்வரத்திலிருந்து எங்கள் இணைப்பாளர் இரத்தினசபாபதி அவர்கள் எங்கள் சார்பில் கொண்டுவந்த மணலில் ஒவ்வொருவரும் தனித்தனி இலிங்கம் செய்து வழிபாடு இயற்றியபின் கரைத்துவிட்டு நீராடினோம். பல புண்ணிய நதிகள் சங்கமமாவதால் அந்தத் தீர்த்தம் தெய்வீகமும் புனிதமும், நோய்நீங்கும் சக்தியும் நிறைந்ததாகும். நாம் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்கள் எல்லாவற்றையும், சங்கமத்தில் கரைத்துவிட்டுப் புத்துணர்ச்சியுடன் புனிதர்களாகக் கரை சேர்ந்தோம்.

திரிவேணிசங்கம தீர்த்தத்தைப் பாத்திரங்களில் எடுத்துக்கொண்டு கங்கைக்கரையில் உள்ள ஆனந்தபவன் எனும் திருமால் கோயிலையும், அல்லாஹ் மாளிகையையும் வெளியில் நின்று பார்த்துவிட்டு இரவு அயோத்தி நோக்கிப் பஸ்ஸில் பயணமானோம்.

கங்கைக் கரையில் பல்லாயிரக்கணக்கான குடிசைகளையும், கடைகளையும், பிச்சைக்காரர்களையும், மடங்களையும் பார்த்து மனம் சலித்துக்கொண்டோம். அதேநேரம் பல்லாயிரக்கணக்கான பக்தர் பயபக்தியுடன் வந்து தீர்த்தமாடுவதைக் கண்டு மனம் பூரித்தது. இரவு பஸ் மூலம் அயோத்திக்குப் பயணமானோம்.

## அயோத்தி

26.01.2017 இல் அயோத்தியில் இராமர் பட்டாபிஷேகம் நடந்த நினைவு மாளிகையில் பிரார்த்தனையில் பங்குபற்றிவிட்டு இராமர், தசரதர் மாளிகைகள் இருந்த இடங்களையும் பார்த்துக் கொண்டு இராம ஜென்ம பூமிக்குப் போனோம். முழுப் பொலிஸ் பாதுகாப்பில் எந்தப் பொருளும் கொண்டு போகாமல் வெறுமையாகவே அனுமதித்தார்கள். பாபர் மசூதியின் இடிபாடுகளையே பார்க்க முடிந்தது.

இராமாயண காலத்தில் இருந்த இராமர் மாளிகையை மொகலாயர் பிடித்து அழித்து அங்கு பாபர் மசூதி எனும் இஸ்லாம் மதவழிபாட்டிடத்தை அமைத்திருந்தார்கள். சிவசேனையினர் அதை இடித்து அழித்து இராமர் மாளிகை கட்ட முயற்சித்த போது அது தடுக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்புடன் இருக்கிறது.

அயோத்தியின் புனித நதியான சரயுநதி மிகத் தூய்மையாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதில் நீராடிக் கோபூசை செய்து வழிபட்டு மகிழ்ந்தோம். மாலையில் பஸ்வண்டி மூலம் காசி நோக்கிப் பயணமாகி இரவு காசியில் தங்கினோம்.

## காசி

27.01.2017 முழு நாளும் காசியில் தரிசித்தோம். காசி எனும் பெயர் ஒளிதரும் இடம் எனும் பொருள்தரும். இது வாரணாசி என்றும் சொல்லப்படும். வடக்கே இருந்துவரும் வருணை நதியும் தெற்கே இருந்துவரும் அஸி நதியும் கங்கையில் கலக்கும் இடம் ஆதலால் வருணை+அஸி = வாரணாசி ஆயிற்று. இது ஆங்கிலத்தில் பனாரிஸ் எனப்படுகிறது. காசிப்பட்டு, பனாரிஸ்பட்டு என்பது பிரபலமானது.

காசியில் கங்கைக் கரையில் 64 நீராடும் கட்டங்கள் (துறைகள்) உள்ளன. சிறுசிறு ஒழுங்கைகள் போன்ற குறுகிய பாதைகள் ஊடாகவே கங்கைக்கரையை அடையவேண்டும். நாம் தங்கி இருந்த பிரதான வீதியில் இருந்து 1கி.மீ. தூரம் குறுகிய பாதைகள் ஊடாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமான்காட் எனும் துறையில் கங்கையில் இறங்கி நீராடி ஈர உடுப்புடன் சங்கற்பம், தர்ப்பணம் செய்து இறந்த முன்னோர்களுக்குப் பிண்டம் போட்டோம்.

நீளமான படிக்கட்டுகளில் 35பேரையும் இருக்கவைத்து பண்டா எனப்படும் குருக்கள் பிண்டத்திற்கு வேண்டிய பொருள் எல்லாம் தந்து சொல்ல வேண்டிய மந்திரங்களைச் சொல்லித்தந்து எங்களையே சொல்லவைத்துப் பக்குவமாக பிண்டம் போடும் கருமங்களை விளங்கப்படுத்திச் செய்யவைத்தமை எங்களுக்குப் புதுமையாகவும் மனப்பூரிப்பாகவும் இருந்தது. அது மட்டுமல்ல இறந்த நமது முன்னோர்களின் உறவு முறைகளைச் சொல்லிச் சொல்லி அவர்களுடைய பெயர்களை நினைத்து 17 பிரிவுகளாகப் பிண்டம் போடச் செய்தார். தர்ப்பணம் செய்வதற்கு இந்த உலகிலேயே உயர்ந்த இடம் காசி என்பதையுணர்ந்து இப்படி ஒரு புண்ணிய கருமத்தை நாம் முன்னோர்களுக்காகச் செய்யும் பேறு கிடைத்தமைக்கு மிகவும் மகிழ்ந்தோம். சுமாரான குளிரும் மப்பும் மழைத்தூறலுமாக இருந்தபோதும் சூரிய நமஸ்காரம் செய்யும் போது சூரியன் சில நிமிடம் காட்சி தந்தமை அதிசயமாய் இருந்தது. மனப்பூரிப்பால் குளிர் நடுக்கம் கூடத் தெரியவில்லை. பண்டா எனப்படும் குரு ஹிந்திக்காரராயிருந்த போதும் தமிழிலேயே எல்லாம் சொல்லிச்சொல்லி சமஸ்கிருத மந்திரங்களையும் சுத்தமான உச்சரிப்புடன் சொல்லச் செய்தமையும் மன நிறைவைத் தந்தது. காசியில் நம் முன்னோர்களுக்குத் தர்ப்பணம் செய்ய வேண்டும் என்ற எங்கள் நீண்டகாலக் கனவு நிறைவானமை எல்லோர்க்கும் மன நிறைவைத் தந்தது.

மாலையில் காசிவிஸ்வநாதரைத் தரிசிக்கப் புறப்பட்டோம். விஸ்வநாதர் கோயிலுக்குப் போக நான்கு பாதைகள் உள்ளன. எல்லாம் ஒடுக்கமானவையும், பல திருப்பங்களை உடையனவுமான பாதைகளே.

நாம் மணிகர்ணிகா துறையில் இருந்து லலிதாகோட் எனும் 2ஆம் இலக்கப்பாதையூடாகப் போனோம். மணிகர்ணிகா என்பது சிவனும் காளியும் ஊழிக் கூத்து ஆடிய போது சிவனின் காதிலிருந்த குண்டலமும், காளியின் காதிலிருந்த தோடும் கழன்று விழுந்து சங்கமமான இடம் எனச் சொல்லப்படுகிறது. (இது கர்ணம் என்றால் காது. மணியென்றால் காதணி. ஆதலால் காதணிவிழுந்த இடம் எனப் பெயர் பெறுகிறது.)

ஒற்றையடிப்பாதையில் ஒருவர் பின் ஒருவராகப் போகவேண்டும். அங்கிருந்து வருபவர்களுக்கும் வழிவிட வேண்டும். முதலில் சாட்சிகணபதி தரிசனம் தருகிறார். அவரை வணங்கிக் கொண்டு மேலே போனால் பலவிதமான பொருட்கள் விற்கும் கடைகளைக் காணலாம். நாம் அங்கு அபிஷேக அர்ச்சனைக்குரிய பொருட்களை வாங்கிக்கொண்டு கோயிலுக்குட் சென்றோம். தென்நாட்டுக் கோயில்கள் போல் பெரிய கோயில் அல்ல. வடநாட்டுப் பாணியில் அமைந்த கோயில் மண்டபமும் கருவறையுமாக உள்ளது. கருவறையில் வடகிழக்கு மூலையில் நில மட்டத்துக்குக் கீழ் காசி விஸ்வநாதர் இருக்கிறார். முன்னேற்பாட்டின்படி மண்டபத்தில் அபிஷேகக் கிரியைகள் நடைபெற்று, அவரவரே கும்பங்களால் விஸ்வநாதருக்கு அபிஷேகம் செய்யும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. தீபாராதனையும் செய்யலாம். பின் சுவாமிக்குப் போட்ட மாலையை எடுத்து நமக்குப் போட்டு ஆசீர்வதித்தார்கள். நாங்கள் மண்டபத்தில் இருந்து தேவாரம் ஓதி வழிபட்டோம் அதிக சனம் வருவதால் அதிக நேரம் இருக்கமுடியாது.

அன்னபூரணி ஆலயம் பக்கத்தில் இருக்கிறது. அதேபோல விசாலாட்சி அம்மன் கோயிலும் சிறு தூரத்தில் தனியாக இருக்கிறது. அவற்றிலும் அர்ச்சனை செய்வித்து வணங்கினோம். அன்னபூரணி கோயிலில் அரிசி பிரசாதமாகத் தருகிறார்கள். அதனை வீட்டுக்குக் கொண்டுபோய் பூசையறையில் வைத்து சில அரிசியை சோற்றுலையில் போட்டு உண்டால் எக்காலத்தும் சோற்றுக்குக் குறை ஏற்படாது என்ற நம்பிக்கையுண்டு.

விஸ்வநாதர் கோயில் விமானம், விஷ்ணு கோயில் ஸ்தூபி போல கூராக உயரமாக உள்ளது. இது தங்கத்தால் செய்யப்பட்டிருக்கிறது. பஞ்சாப் மன்னன் ரஞ்சித்சிங் பொன் வேய்ந்தான் எனச் சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வநாதர் ஆலயம் மொகலாயரால் அழிக்கப்பட்டிருந்ததென்றும் பின் இப்போதுள்ள ஆலயம் இந்தூர் அரசி அகல்யாபாயால் கட்டப்பட்டதாகவும் வரலாறு உண்டு. விஸ்வநாதருக்குரிய நித்திய பூசைக்குரிய பொருட்களும் செலவுகளும் நாட்டுக் கோட்டை நகரத்தாரால் கொடுக்கப்படுகிறன. நகரத்தார் சத்திரத்தில் இருந்து மேளதாளத்துடன் பூசைப் பொருட்கள் தினமும் கொண்டுவரப்படும். விசாலாட்சி அம்பாள் கோயிலிலும் அவர்களின் மேற்பார்வையில்தான் குங்கும அர்ச்சனை நடைபெறுகிறது. கங்கையில் நீராடப் பாவம் எல்லாம் தீரும், காசியில் இறப்பவர்க்கு முத்தி என்பதெல்லாம் ஆன்றோர் வாக்கு. நம்பிக்கை உள்ளவர்க்கு இது சித்திக்கும்.

காசியில் கருடன் பறப்பதில்லை, பல்லி சொல்லுவதில்லை, பூ மணப்பதில்லை, மாடு முட்டுவதில்லை, பிணம் மணப்பதில்லை. மாலை வேளை கங்கைக் கரையிலே தீபாராதனை தினமும் நடைபெறும். இந்த ஆராத்தி காசியிலும் ஹரித்துவாரிலும் நடைபெறும்.

எங்களுடன் வந்த ஒரு அம்மா எங்கோ வழிதவறிப் போய்விட்டார். நாம் தேடக்கூடிய இடமெல்லாம் தேடியும் ஆள் கிடைக்கவில்லை. எல்லோரும் கூடி இருந்து மணிகர்ணிகா துறையில் பிரார்த்தித்தோம். நேரம் இரவானதால் எங்கள் தங்கும் இடத்துக்குப் போய் திருமுறையே தஞ்சமென இழந்தபொருளை மீட்டுக் கொடுத்த சுந்தரரின் "கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர்...." எனத் தொடங்கும் பதிகத்தையும் சம்பந்தரின் இடர் களை பதிகமாகிய "மறையுடையாய் தோலுடையாய்..." எனத் தொடங்கும் திருநெடுங்களப் பதிகத்தையும், சுந்தரரின் "மீளாஅடிமை..." என்ற பதிகத்தையும், சம்பந்தரின் பொன்பெற்ற பதிகமாகிய "இடரினும் தளரினும்..." எனும் பதிகத்தையும் எல்லோரும் சேர்ந்து ஒரு மனதாக ஓதிக்கொண்டிருந்தோம். அவர் வரும்வரை பாடுவது என்ற திடசங்கற்பத்துடன் ஓதிக்கொண்டிருந்தோம். இரவு 10.00மணிக்கு இரு ஹிந்தி பாய் இளைஞர்கள் அவரைக் கொண்டுவந்து சேர்த்தனர். "நம்பினார் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு" என்ற நம்பிக்கை எம்மைக் காத்தது. கண் இழந்தவன் மீண்டும் கண் பெற்றது போல உவகையடைந்தோம். இரவு காசியிலே தங்கினோம்.

28.01.2017 காலையில் காசி காலபைரவரைத் தரிசித்துக் காசிக்கயிறும் வாங்கிக் கொண்டு துர்க்கையம்மனையும் தரிசித்தோம். தொடர்ந்து திருமால் கோயிலுக்குப் போய் வணங்கினோம். இங்குள்ள கோயில்கள் ஒன்றுக்கொன்று பல மைல் தொலைவிலேதான் இருக்கின்றன. வடநாட்டில் பிரபலமான வாரணாசி பல்கலைக் கழகத்தையும், அதன் எழிலையும் பஸ்வண்டியில் இருந்தவாறே சுற்றிப்பார்த்துவிட்டுக் காயா நோக்கிப் பயணமானோம்.

## காயா

29.01.2017 காயா பீகார் மாநிலத்தில் உள்ளது. கங்கையின் கிளைநதியான பல்குணி ஆற்றங்கரையில் திருமால் கோயிலும் காயா சிரார்த்தம் செய்வதற்குரிய மண்டபமும் அட்சயவடம் எனும் புராதன ஆலமரமும் உள்ளன.

காயாசுரன் என்னும் ஒரு அசுரன் திருமாலை நோக்கித் தவம் செய்தான். திருமால் காட்சி கொடுத்து என்னவரம் வேண்டும் என்று கேட்டபோது "யார் என்னைத் தொட்டாலும் புண்ணியவான்களாகும் வரம் வேண்டும் என்று கேட்டுப் பெற்றான். அன்று முதல் எல்லோரும் அவனைத் தொட்டுப் புண்ணியவான்களாயினர். யமனுக்கோ, நரகலோகத்துக்கோ வேலை இல்லாமற் போய்விட்டது. திருமால் அவனுக்கு நல்லகதி கொடுக்க வேண்டும் எனக்கருதித் தான் ஒரு பெருயாகம் செய்யவேண்டும். அதற்குரிய புண்ணியமான இடம் உன் உடல்தான், சம்மதிப்பாயா என்று கேட்டார். அது என் பாக்கியமே என ஏற்றுக்கொண்ட காயாசுரன் அந்த இடத்தில் படுத்தான். அவன் மேல் திருமாலின் பெரிய யாகம் நடந்தது. யாகாக்கினியால் அவன் தேகம் நடுங்கியது. திருமால் அவன் மேனிமேல் தன்பாதத்தைப் பதித்தார். அவன் முத்தியடைந்தான். அந்தப் புண்ணிய இடமே இந்தக்காயாவாகும். அங்கே சிரார்த்தம் செய்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோர் நற்கதி பெறுவர் என்பதால் எந்தநாளும் தொகையான மக்கள் வந்து காயாசிரார்த்தம் செய்கிறார்கள்.

முன் ஏற்பாட்டின்படி 35 பேரும் இருந்து ஒரே நேரத்தில் சங்கற்பம் செய்து சிரார்த்த பிண்டம் போடுவதற்குரிய பொருட்கள் எல்லாம் தயாராய் இருந்தன. பல்குணி ஆற்றில் எந்தக் காலத்திலும் நீர் இருப்பதில்லை. ஆதலால் நாம் தங்கிய விடுதியிலே நீராடிவிட்டு வந்திருந்தோம்.

காசியில் செய்தது போலவே சிரார்த்த கருமங்கள் எல்லாம் நடந்தன. அங்கு 17 பிண்டம்; இங்கு 32 பிண்டம். வேண்டிய மந்திரங்கள் கிரியை முறைகளைக் குருக்கள் (பண்டா) சொல்லித்தர நாம் மிக ஆனந்தமாகச் செய்தோம். இறந்த எமது முன்னோர்களை 32 பிரிவினராக்கி ஒவ்வொரு பகுதியினரையும் பெயர் சொல்லி நினைக்கச் செய்து பிண்டம் போட்டது அளவிலா மன நிறைவைத் தந்தது. பிண்டபூசை எல்லாம் முடிந்து பிண்டங்களை ஒன்றுசேர்த்துக் கோயிலின் நடுவே உள்ள திருமால் பாதத்தில் சேர்த்துவிட்டுத் தர்ப்பையையும் தீர்த்தத்தையும் அட்சயவடம் எனும் ஆலமரத்தடியில் விட்டு வணங்கிக் குருதட்ஷணையும் தானமும் கொடுத்துவிட்டுப் புத்துணர்ச்சியுடன் மீண்டோம். காசி சிரார்த்தத்திலே தாம் விரும்பி உண்ணும் காய் ஒன்று, கனி ஒன்று, அத்தோடு உணவிற்கு பயன்படும் இலை ஒன்றும் இனிமேல் உண்ணாது விடவேண்டும். ஆண் பெண் பேதம் இன்றி எல்லோரும் காயாசிரார்த்தம் செய்யலாம் என்பதும் அப்படி எல்லோரும் செய்யக் கிடைத்ததும் பெரும் பேறே. 32ஆவது பிண்டம் நாம் அன்புடன் வளர்த்த பிராணிகளில் இறந்தவற்றுக்கானது என்பதை எண்ணி எண்ணித் தாயுமானாரின் "எல்லா உயிரும் இன்புற்றிருக்க வேண்டுவதே அல்லால் வேறொன்றறியேன் பராபரமே" என்ற பராபரக் கண்ணியின் பொருள் அன்றுதான் விளங்கியது.

## புத்தகாயா

காயாவிலிருந்து புறப்பட்டுப் பஸ் வண்டியில் இருந்தவாறே புத்தர் ஞானம் பெற்ற இடமான புத்தகாயாவையும் தரிசித்தோம். மிகத் தூய்மையான, தெய்வீகமான இடம். கட்டிடங்களும் சோலைகளும் பன்னாட்டுப் பௌத்தத் துறவிகளும் பார்வையாளர்களும் நிறைந்திருப்பதைக் கண்டு பூரண ஞானம் பெற்ற புனிதராகிய புத்தரையும் நினைந்து தொடருந்தில் புதுடெல்லி நோக்கிப் பயணம் ஆனோம்.

## ஹரித்துவார்

காயாவில் இருந்து புதுடெல்லி வர 26 மணித்தியாலங்கள் தொடருந்து ஓடவேண்டியிருந்தது. பனிமூட்டம் காரணமாகத் தாமதமாகியது. நாள்முழுவதும் தொடருந்தில் உறங்கல் இருக்கையில் படுத்தும், இருந்தும் பயணம் செய்து புதுடெல்லி வந்து அங்கிருந்து பேருந்து மூலம் 30.01.2017 இரவு 1.00 மணிக்குக் ஹரித்துவார் வந்து தங்கினோம்.

ஹரித்துவார் என்பது இறைவனின் இருப்பிடத்துக்கு வாயில் எனப் பொருள்தரும். ஹங்கோத்திரி, ஜமுனோத்திரி எனும் இரு மலைகளுக்கிடையில் கங்கை ஓடிவருகிறது. பிரமகுண்டம் எனும் இடத்தில் தீர்த்தம் ஆகிறது. மகாவிஷ்ணுவின் பாதம் பதித்த இடம் ஆதலால் ஹரிக்கோபௌமி என்றும் அழைக்கப்படுகிறது.

சகரரின் புத்திரர்கள் 60 ஆயிரம் பேர் கபிலமுனி சாபத்தால் சாம்பரான போது அவர்களை உயிர்ப்பிக்கப் பகீரதன் பெருந்தவம் செய்து தெய்வ கங்கையை வரச் செய்த தலம் இதுவாகும். இது தவத்துக்கு உரியஇடம். 300க்கு மேற்பட்ட ஆச்சிரமங்கள் உள்ளன. கங்கை மிகவும் தூய்மையாக இருக்கும் இடம் இது.

31.01.2017 இல் பேருந்து மூலம் ஹரித்துவார் பார்த்துக்கொண்டு கங்கைக் கரையோரமாக வழியில் உள்ள பிரமாண்டமான சிவனின் சிலையையும் தரிசித்துக் கொண்டு ரிஷிகேஷ் வந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஷி என்பது முனிவரைக் குறிக்கும், கேஷ் என்பது இடம். எனவே ரிஷிகேஷ் என்பது முனிவர்கள் தவம் செய்யும் இடம் எனப் பொருள்படும். மேலே தொடருந்து போகமுடியாத காரணத்தால் முச்சக்கரவண்டி மூலம் மேலே 2மைல் தூரம் சென்றோம். அங்கு கண்ணுவ முனிவரால் சகுந்தலை வளர்க்கப்பட்ட ஆச்சிரமம், சிவானந்த ஆச்சிரமம் முதலான பல ஆச்சிரமங்கள் இருக்கின்றன.

இராமர் பாலம் எனப்படும் தொங்கு பாலத்தால் மேலே சென்றோம். இப்பாலம் 1927இல் 2½ இலட்சம் வெள்ளி செலவில் கட்டப்பட்டது என கூறப்படுகிறது. இதன்கீழே கங்கையும், பகீரதியும் கலக்கும் பகீரதிகங்கா ஓடுகிறது. மிகத்தூய்மையான தீர்த்தம். கங்கை பிரவாகித்து ஓடினாலும் பாதுகாப்பாக நீராடுவதற்கேற்ற துறைகள் கட்டப்பட்டுள்ளன. நம்மிற் பலர் குளிர்ந்த நீரில் தீர்த்தமாடி மகிழ்ந்தார்கள். அதன் கரையில் நின்று எல்லோரும் கூடி நிழற்படமும் எடுத்துக் கொண்டார்கள்.

ரிஷிகேஷிலிருந்து பேருந்து மூலம் புதுடெல்லி வந்து, விமானமூலம் சென்னைக்குவந்து, பேருந்துமூலம் இராமேஸ்வரம் போகும்வழியில் ஆடுதுறையில் தங்கி, 02.02.2017 இல் தென் குரங்காடுதுறை, திருமணஞ்சேரி ஆகிய பாடல் பெற்ற சிவத்தலங்களைத் தரிசித்தோம். திருவாவடுதுறை சென்று 23 ஆவது குருமகாசந்நிதானம் சீரவளர்சீர் சிவப்பிரகாச பரமாசாரியாரின் சமாதிக் கோயிலில் வழிபாடு செய்துகொண்டு கோமுத்தீஸ்வரர் கோயிலுக்குப் போய் அத்தலத் தேவாரங்களைப் பாடி வலம்வந்து வணங்கித் திருமூலர் சுவாமிகளின் கோயிலில் தியானம் செய்துவிட்டுத் திருமூலர் தவம் செய்து திருமந்திரம் பாடிய படர்அரசைச் சுற்றித் திருமந்திரம் பாடி வணங்கினோம்.

02.02.2017 இரவு திருவாவடுதுறை ஆதீனத்தில் சித்தாந்தரத்தினம், திருமுறைச் செல்வர் பட்டமளிப்பு விழாவில் நம்மவர்களும் பட்டம் பெற்றதுடன் குருமூர்த்திகளின் ஆசியும் பெற்றுக்கொண்டு இராமேஸ்வரம் நோக்கிய பேருந்துப் பயணத்தை மேற்கொண்டு 03.02.2017 காலை 6.00 மணிக்கு இராமேஸ்வரத்தை அடைந்தோம்.

## இராமேஸ்வர தீர்த்தம்

தீர்த்த யாத்திரை செய்பவர்கள் தென்னாட்டவராயின் முதலிலே இராமேஸ்வரத்தில் தீர்த்தமாடி அங்குள்ள மண்ணை எடுத்துக்கொண்டு போய் திரிவேணிசங்கமத்தில் கரைத்துத் தீர்த்தமாடி அங்குள்ள தீர்த்தத்தை எடுத்துக் கொண்டு, காசி, காயா, அயோத்தி, ஹரித்துவார், ரிஷிகேஷ் முதலான தீர்த்தங்கள் ஆடி, நிறைவாகத் திரிவேணி சங்கமத் தீர்த்தத்தால் இராமேஸ்வர மூலவர் இராமநாதசுவாமிக்கு அபிஷேகித்துத் தீர்த்தயாத்திரையை நிறைவு செய்யவேண்டும் என்பது நியதி. அதே போல வடநாட்டவர் திரிவேணியில் தொடங்கி இராமேஸ்வரத்தில் நிறைவு செய்வர். ஆதலால் இந்தப் புண்ணிய தீர்த்தத் தலங்களில் எல்லாம் வடநாட்டவரும் தென்னாட்டவரும் தொகையாகக் கலந்து நிற்பதை எந்நாளும் காணலாம்.

நாமும் இந்த நியதி தவறாமல் தீர்த்தயாத்திரையை நிறைவு செய்ய இராமேஸ்வரம் வந்தோம். இது இராமபிரான் சிவபக்தனான இராவணனைக் கொன்ற பிரமகத்தி தோஷம் நீங்க இராமர் சிவலிங்கப் பிரதிட்டை செய்து சிவ பூசைசெய்த இடம். கருவறையிலே சீதை மணலால் உருவாக்கிய சிவலிங்கமும், அனுமான் கயிலாயத்திலிருந்து கொண்டுவந்த சிவலிங்கமுமாக இரண்டு இலிங்கங்கள் உள்ளன.

03.02.2017 காலை 7.00 மணிக்கு இராமேஸ்வரம் கோயில் வாசலின் கிழக்கேயுள்ள அக்கினி தீர்த்தம் எனப்படும் கடல் தீர்த்தத்தில் நீராடி ஈரத்துணியுடன் கரையில் சங்கற்பம், தர்ப்பணம் செய்து கொண்டு (குருமூலம்) கோயிலினுள் தீர்த்தப் பிரவேசச் சீட்டுப் பெற்று வரிசையில் போனோம். ஒவ்வொருவருக்கும் தீர்த்த அனுமதிச் சீட்டாகக் கையில் காகிதக் காப்பு ஒட்டிவிட்டார்கள். 22 தீர்த்தங்கள் ஆடவேண்டும். அங்கங்கு தீர்த்தக் கிணற்றடியில் தீர்த்தம் ஆட்டுபவர்கள் வாளியுடன் நின்று தலையில் தீர்த்தமாட்டிவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 1.. | மகாலட்சுமி தீர்த்தம் | 2. | சாவித்திரி தீர்த்தம் |
| 3. | காயத்திரி தீர்த்தம் | 4. | சரஸ்வதி தீர்த்தம் |
| 5. | சேதுமாதவ தீர்த்தம் | 6. | நள தீர்த்தம் |
| 7. | நீல தீர்த்தம் | 8. | கவாய தீர்த்தம் |
| 9. | கவாட்ச தீர்த்தம் | 10. | கந்தமாதன தீர்த்தம் |
| 11. | சங்கு தீர்த்தம் | 12. | சக்கர தீர்த்தம் |
| 13. | பிரம்மாத்திர விமோசன தீர்த்தம் | 14. | சூர்ய தீர்த்தம் |
| 15. | சந்திர தீர்த்தம் | 16. | கங்கா தீர்த்தம் |
| 17. | யமுனா தீர்த்தம் | 18. | காயா தீர்த்தம் |
| 19. | சாத்யாம்ருத தீர்த்தம் | 20. | சிவ தீர்த்தம் |
| 21. | சர்வ தீர்த்தம் | 22. | கோடி தீர்த்தம் |

எனப்படும் தீர்த்தங்களில் கோடி தீர்த்தம் தனித்துவமானது. இராமர் சிவலிங்கப் பிரதிட்டை செய்துவிட்டு அபிஷேகம் செய்வதற்காக அவ்விடத்தில் தன் அம்பால் ஊன்றி உண்டாக்கப்பட்டதே கோடி தீர்த்தம். இத் தீர்த்தத்தில்தான் சுவாமிகளுக்குத் தினமும் அபிஷேகம் நடக்கும். இந்த அபிஷேக நீர் கோமுகி ஊடாக வெளியில் வந்து நாம் தீர்த்தமாடக் கிடைக்கிறது.

இதுவரை 21 தீர்த்தமும் கடுங்குளிரானதால் நாம் நடுங்கி நடுங்கித்தான் தீர்த்தமாடினோம். கோடி தீர்த்தம் சுவாமியின் மேனியின் அபிஷேக தீர்த்தமாகவும் கதகதப்பாகவும் வருவதால் எமது உடலில் பட்டதும் ஆனந்த பரவசமாக இருந்தது. இந்த 22 தீர்த்தங்களும் ஆடுவதற்கு 3,4 மைல் தூரம் சுற்றிச் சுற்றி நடக்க வேண்டும். வழிகாட்டிப் பெயர்ப்பலகைகள் ஆங்காங்கு உள்ளன.

தீர்த்தமாடி முடிந்ததும் உடுப்பு மாற்றும் இடத்துக்குப் போய் ஈர உடையை அங்கேயே விட்டுவிட்டு மாற்றுடை அணிந்து சுவாமி தரிசனத்துக்கு உள்ளே சென்றோம் . நாம் திரிவேணி சங்கமத்திலிருந்து கொண்டுவந்த தீர்த்தத்தை உள்ளே கொடுத்துச் சுவாமிகளுக்கு அபிஷேகம் செய்யச் செய்து ஆனந்த பரவசராய் தீபாராதனையைத் தரிசித்து விபூதிபிரசாதம் பெற்றுக் கொண்டு, மனிதப்பிறப்பின் முக்கிய இலட்சியம் ஒன்றை நிறைவேற்றிய மனப்பூரிப்படைந்தோம்.

இராமேஸ்வரம் மிகப் பழமையான கோயில். இதன் கர்ப்பக்கிருகம் இலங்கை மன்னன் பராக்கிரமபாகுவால் 1173இல் கட்டப்பட்டது எனக் கல்வெட்டுக் கூறுகின்றது. இத்திருக்கோயிலின் மூன்றாம் பிரகாரம் உலகத்திலேயே மிக நீண்டது. கிழக்கு மேற்காக 690அடி நீளமும் வடக்குத் தெற்காக 430அடி நீளமும் கொண்ட அற்புதமான கருங்கல் சிற்ப வேலைப்பாடு அமைந்து பார்ப்பவர் மனங்களைக் கொள்ளை கொள்கிறது.

## சிதம்பரதரிசனம்

மாலையில் சிதம்பரம் நோக்கிப் பேருந்தில் பயணமானோம். இரவு சிதம்பரம் மாலைகட்டித் தெருவில் யாழ்ப்பாணத்துச் சித்தர் புண்ணியநாச்சி அம்மையார் பெயரில் யாழ். சைவ பரிபாலன சபை கட்டிய மாடிமனைகளில் தங்கினோம்.

04.02.2017 காலை 5.00 மணிக்கே நீராடிவிட்டுச் சிதம்பர தரிசனத்துக்குப் புறப்பட்டோம். சிவபுராணமும் ஏனைய திருவாசகங்களும் பாடிக்கொண்டு கண்டவர்கள் அதிசயிக்கும் சிவனடியார் திருக்கூட்டமாக கீலைக் கோபுர வாயில் வழியாகச் சென்று நடராசரின் காலைப் பூசை (7.00மணி) தரிசனம் பெற்றோம். அங்கு எங்கள் இயக்குநரின் நண்பரான வெங்கடேச தீட்சிதர் நடராசர் கோயில் அமைப்பு முதல் வழிபாட்டு முறைகள் யாவற்றையும் பக்குவமாக உபதேசித்தார்.

அருவமான சிதம்பர இரகசியத்தையும், அருவுருவமான மூலவரையும், உருவமான நடராசரையும் தரிசித்துக் கொண்டு சிவகாம சுந்தரி அம்மன் கோயிலையும் தரிசித்து

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயாவிளான் ஞானவைரவர் ஆலயத்தின் சிறப்பு

ஆதி காலம் முதற்கொண்டு குலதெய்வ வழிபாடு சைவசமய வளர்ச்சியுடன் மிக ஒன்றியதாக இருந்திருக்கின்றது. மக்கள் தங்கள் பற்று உணர்வு வேண்டுதலோடு தங்களைக் காக்கும் தெய்வங்களாக நம்பிக்கையோடு வழிபாடு செய்து வருகின்றனர். "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது சான்றோர் மொழி. மக்கள் குடியிருக்கும் ஊரில் ஆலயம் இருந்தால், மக்கள் அறநெறி பண்பாட்டுடனும் கலாசார விழுமியங்கள் வழுவாதும் வாழ்வார்கள் என்பது கருத்தாகும். சிவஸ்தலங்கள் என்று சொல்லப்படுகின்ற சிவன்பார்வதி ஆலயங்கள், விநாயகர், முருகன் ஆலயங்கள் எல்லா ஊர்களிலும் இல்லாதிருப்பினும், தங்கள் குலதெய்வங்களையே இஷ்ட தெய்வங்களாகவும் காக்கும் கடவுளாகவும் தத்தமது ஊரில் மக்கள் வழிபட்டு வந்தார்கள்.

அந்த வழியில் எமது ஊரில் எழுந்தருளி என்றும் அருள்பாலித்து வரும் ஆலயமாக விளங்கியது எமது ஞானவைரவர் ஆலயம். வைரவக் கடவுள் சத்துவ குணத்தில் தாமத குணத்தர். அவர் சங்காரருத்திரரெனப்படுவர். சகல தத்துவ சம்பந்தங்களையும் சங்கரித்து ஆன்மாக்களை ஈடேற்றுங் கோலமே அவரது வடிவம். அவரது உருவம் சுத்த நிர்வாணமாயிருக்கும். அவ்வுருவத்திற்கு உடை தரிப்பதேயில்லை. உலகப் பற்றை விடினும், உடற்பற்றை விடல் சிறிது கடினம். உடல் பற்று இருந்தால் உடையில்லாதிருக்க முடியாது. அந்தப் பற்றினையும் விடு என்பதே அவருடைய வடிவம் காட்டுவது. வினை விழும்போது தான் உடற்பற்று அழியும். அவைகளை அழிக்கும் கோலம் தன் கோலமாகையால், தாமத குணத்தைக் காட்டும் கோரவடிவுடையவராக இருக்கின்றார். பிரமா விஷ்ணு முதலிய தேவர்கள் இறைவனை மறந்து தருக்குற்ற காலத்தில், அவர்களைத் திருத்துவதற்காகக் கருணை கொண்டு, கருணையிற் கோபவடிவாய் சென்று, பிரமனது ஒரு சிரசை நகத்தாற் கிள்ளி ஏனைய தேவர்களின் இரத்தத்தை அவர்களின் தருக்கடங்கும் வரையும் கவர்ந்து ஆட்கொண்ட கோலம் வைரவ மூர்த்தம் ஆகும்.

சிவத்தினின்று தோன்றிய காரணத்தால் இவர் சிவகுமாரர் எனப்படுவார். ஆயினும் சிவத்தின் வேறாகாத சக்தி வடிவமே அவர் ஆவார். இவரது வாகனம் வேதவடிவாகிய நாய் ஆகும். அவரை வணங்கும் போது எங்களுடைய அகந்தையை நீக்கிக் காத்தருளும்படி வேண்டுதல் செய்கின்றோம். இப்படி காக்கும் கடவுளாக போற்றி வழிபட்ட ஆலயம் அமைந்த இப் பிரதேசம் இன்று யுத்தம் நிறைவு பெற்று சில ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் அதி உயர் பாதுகாப்பு வலயமாக உள்ளது மிகவும் மனவருத்தத்தை தருகின்றது. இப் பகுதியில் உள்ள சிறு குறிச்சிகளான தென்மூலை, வடமூலை, கரம்பைகடவை, தேகாமம், திடற்புலம், குட்டியப்புலம் முதலிய பரந்த பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் தங்கள் இஷ்ட தெய்வமாக வணங்கிய ஆலயம். இது பலாலி - யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து சிறிது தூரம் வடக்கே நெடுஞ்சாலையில் இருந்து உள்ளே செல்லும் தெருவில் அரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

இவ்வாலய ஸ்தல வரலாற்றை தற்போதய சூழ்நிலையில் தெரிந்து கொள்ள முடியாதிருப்பினும், நாம் எமது சிறு வயது முதல் அவ்வாலய சூழலில் வசிக்கும் காலம்வரை அறிந்து கொண்டவற்றையும் அக்காலம் முதல் நாம் பார்த்த ஆலயத்தின் சூழலை கருத்தில் கொண்டும் பார்க்கும் போது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கும் என்று தோன்றுகின்றது. இதற்கு முக்கியமாக இருப்பது ஆலயத்தின் வடகிழக்குப் புறமாக இருக்கும் புளியமரம். இப்படியான ஒரு முதிய பாரிய மரம் வேறு எங்கும் இருப்பதாக தெரியவில்லை. இதன் அடி சுற்றளவு 15மீற்றருக்கு மேல் இருக்கும். இதில் இருக்கும் கெட்டுக்கள்(கொம்பு) ஒவ்வொன்றும் நாநூறு, ஐநூறு வருடங்களான புளிய மரத்தின் அடிப்பாகம் போன்றவை. சரித்திர ஆராய்ச்சிக்குரியதான இம்மரம் ஏறக்குறைய அரை ஏக்கர் நிலத்திற்கு நிழல் கொடுக்கின்றது. ஆலயத்தின் சுற்றாடல் மனத்திற்கு அமைதியையும் தெய்வீக உணர்வையும் தரும் சூழலைக் கொண்டது. இலுப்பை, வேம்பு, அரசு மூன்றும் ஒன்றாக சேர்ந்து இருப்பது ஓர் அற்புத நிகழ்வாகும்.

ஆலயத்தின் உற்சவங்களை நோக்கும் போது வைகாசி மாதத்தில் நடைபெறும் “பொங்கல் வைரவர் மடை” மிகச் சிறப்பானதாகும். இங்கு வதியும் மக்கள் பெரும்பாலானோர் கமக்காரர்களாக இருந்தார்கள். தங்கள் தொழில் சிறப்பிற்கும் வாழ்வு முன்னேற்றத்திற்கும் கருணை புரிந்த தெய்வத்திற்கு நன்றிக்கடனாக இவ்விழாவை மிகச் சிறப்பாக கொண்டாடினார்கள். அதுமட்டுமன்றி இவ்விழா ஒற்றுமைக்கு உறுதுணையாகவும், உறவுகளை இணைக்கும் ஒரு நிகழ்வாகவும் திகழ்ந்தது. திருமணம் முதலிய பல காரணங்களால் இக் கிராமத்திலிருந்து சென்று வேறு இடங்களில் வாழ்ந்து வரும் அனைவரும் தவறாது இவ் விழாவிற்கு வந்து பொங்கி மடைவைத்து, பின்னர் உறவுகளோடு ஒன்றிணைந்து உணவருந்தி குதூகலித்து செல்வார்கள். இந்த உறவுகளை ஒன்றிணைத்து வைத்திருப்பது எம் பெருமானின் புதுமையும் அவர் மீது கொண்ட பக்தியுமேயாகும். இவ் விழாவில் குவியல் குவியலாக ஒவ்வொரு குடும்பத்தினரும் வாழை, பலா, மா, தோடை போன்ற பலவகைப் பழங்களையும் குவித்து வைத்து பெருமானுக்கு மடை வைப்பார்கள். இறுதியாக பூசையின் முடிவில் கோவில் முன்றலில் நிரையாக வாழை மடல் பரப்பி அதிலே அத்தனை பேரும் பெட்டி பெட்டியாக கற்பூரம் கொட்டி ஒரே நேரத்தில் எரிய விடுவார்கள். அந்நேரம் எம்பெருமானுக்குரிய வாத்தியமான பறை முழங்கும். “அரோகரா” என்ற ஓசை எழும். பக்தி மேலீட்டால் சிலர் உருக்கொண்டு ஆடுவார்கள். நூற்றுக்கணக்கான தேங்காய்கள் உடைத்து காணிக்கை செலுத்தப்படும். இவை என்றும் மனதை விட்டு நீங்காத நினைவலைகள்.

மேலும் பங்குனி மாதத்தில் நடைபெறும் அலங்கார உற்சவம் பக்தியின் அடையாளத்திற்கும், கலாசாரத்தின் பிரதிபலிப்புக்கும் ஒரு எடுத்துக்காட்டாகும். பத்து திருவிழாக்களும் மிகச்சிறப்பாக நடைபெறும். யாழ்ப்பாணத்தில் உள்ள சிறந்த அனைத்து தவில் நாதஸ்வர வித்துவான்களும் அழைக்கப்படுவார்கள். அலங்கார சிகரங்களும் மின்விளக்குகளின் ஒளிவெள்ளமும் கண்ணைப்பறிக்கும் முத்துச்சப்பரத்தில் எம்பெருமான் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அத்தோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரா பௌர்ணமியன்று நடைபெறும் நீர்க்கஞ்சி வார்ப்பும், திருவெம்பாவை, சரஸ்வதி பூசை, சிவராத்திரி போன்ற சமய நிகழ்ச்சிகளும் தவறாது நடைபெற்றன. வெள்ளிக்கிழமைகளில் மாலை பஜனை வழிபாடும் நடைபெற்று வந்தது.

எம்பெருமானைப் போற்றி வழிபட்ட அனைவரும் அவரின் கருணையைப் பெற்றார்கள். மிகவும் புதுமையும் அற்புதங்களும் நிறைந்த தெய்வமாக அருள் புரிந்தார். மறுக்கமுடியாத உண்மை என்ன வெனில் அங்கு வாழ்ந்த மக்களுக்கு இறைபக்தியை ஊட்டியவரும் ஞானவைரவப் பெருமானே. எதற்கெடுத்தாலும் "வைரவர் வைரவர்" என்று சொல்வதும் எந்தப்பிரச்சனை வந்தாலும் "வைரவா காப்பாற்று" என்று வேண்டுவதும் மக்களின் உணர்வுடன் கலந்த ஒன்றாகும். இத்தனைக்கும் எம்பெருமானின் அற்புதங்களே காரணம். அவரின் விபூதியை பூசினாலே நோய் நீங்கிவிடும். அவரை நினைத்து நேர்த்தி வைத்தால் நினைத்த காரியங்கள் நிறைவேறும். பெரும்பாலானவர்கள் கிராமத்தில் இருந்து வெளியே செல்லும் பாதை அருகே ஆலயம் அமைந்து இருப்பதனால் எக்காரியத்திற்குச் சென்றாலும் அவரை வணங்கி சென்றார்கள். மக்கள் யாவரும் குலதெய்வமாக மட்டுமன்றி முழுமுதற் கடவுளாகவே புரிந்துணர்ந்து வழிபட்டார்கள் என்பதில் ஐயமில்லை.

சித்தாந்த இரத்தினம். இராஜேந்திரன் கிருஷ்ணானந்தி

---

10ஆம் பக்கத் தொடர்ச்சி..

சிவககங்கைக் கரையில் நின்று நான்கு திக்குக் கோபுரங்களையும் ஒரே பார்வையில் பார்த்து மகிழ்ந்தோம்.

சிவகங்கையில் இறங்கிச் சிவதீர்த்தம் எடுத்து உச்சியில் தெளித்து, நாவிலும் விட்டுத் தீர்த்தயாத்திரையை நிறைவு செய்தோம். "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்று பாடிப்பாடிப் பரவசராய்ப் புறப்பட்டோம்.

பேருந்து மூலம் சென்னைக்கு வந்து இரவு தங்கி 05.02.2017 இல் சென்னைக் கடைத்தெருவில் விரும்பியதை வாங்கிக்கொண்டு விமானமூலம் மாலை கொழும்பு வந்து சேர்ந்தோம்.

பயண வழி : விமானம், தொடருந்து உறங்கல் இருக்கை, சொகுசு பேருந்து மிகவசதியாகவே அமைந்தன.

தங்கும் இடம் : அங்கங்கு உயர்ந்த ரக விடுதிகளில் நல்ல வசதி செய்து தரப்பட்டது.

உணவு : நாம் செல்லும் இடமெல்லாம் சமையற்காரர் கூடவே வந்து எங்களுக்கு ஏற்ற உணவுகளைச் சமைத்துச் சுடச்சுட சாப்பிடத் தந்தார்கள்.

வழிகாட்டல் : சென்ற இடமெல்லாம் ஆகக் கூடுதலாக எவற்றைப் பார்க்க வேண்டும், எவற்றையெல்லாம் அறிய வேண்டுமோ அத்தனையையும் அறியத் தந்தார்கள்.

அனுசரணை : கூடவந்த வைத்தியர் எந்நேரமும் யார்யார்க்கு வைத்திய உதவி தேவையென அறிந்து உதவினார்.

எல்லோரும் ஒருவர்க்கொருவர் உதவியாயிருந்தனர். குறிப்பிட்ட சிலர் எந்நேரமும் மற்றவர்களுக்கு உதவுவதில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டனர்.

எல்லா ஏற்பாடுகளையும் செய்து தந்து வழிகாட்டிய சிறந்த இணைப்பாளர் எமக்குக் கிடைத்தமை எமது அதிட்டமே.

கலாபூஷணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் நமசிவாய வாழ்க

# திருவைந்தெழுத்தின் சிறப்பு

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுஞ் சமயமாகிய சைவசமயத்தில் முதன்மை பெற்று விளங்கும் மந்திரம் திருவைந்தெழுத்து மந்திரமாகும். திருவைந்தெழுத்தினை செபித்தால் அபாயம் ஒருபோதும் வராது என்பது திண்ணம். அநுபூதி நிலையில் நின்று முத்தியின்பமாகிய ஆத்மலாபத்தை எய்திய அநுபூதிமான்களும், ஞானிகளும் திருவைந்தெழுத்தின் மகிமையறிந்து அவற்றை ஓதி பயனடைந்துள்ளார்கள். திருவைந்தெழுத்தை ஓதுவதற்கு யோக்கியர்கள் சைவதீட்சை பெற்று சைவ அனுட்டானங்களின்படி வாழ்வோர்கள் ஆவர் என நாவலர் பெருமான் சைவவினாவிடையில் எடுத்துரைத்துள்ளார்.

திருவைந்தெழுத்தின் சிறப்பினைப் பற்றி திருமூலநாயனார் தன்னுடைய திருமந்திரத்தில் வருமாறு கூறுகிறார்.

**"அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்**
**அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்**
**அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்**
**அஞ்செழுத் துள்ளே அமர்ந்திருந் தானே"** (திருமந்திரம் - 934)

எம்பெருமான் நந்தியாக திருவைந்தெழுத்தாலே அமர்ந்தருளினார் எனவும், இம்மந்திரத்தாலே சக்கரம் அமைக்கப்படுகின்றது எனவும் சிவபெருமான் ஐந்தெழுத்தின் விரிவாகவும் இருக்கின்றார் எனவும் இம் மந்திரத்தில் திருமூலர் கூறியுள்ளார்.
திருவாசகமணிகள் என்ற நூலில் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனால் அவர்கள் திருவைந்து பற்றிய விளக்கத்தை கீழ்வருமாறு அழகாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.

இவ்விதமாக நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தின் (மந்திரத் திருமேனியின்) விரிவினை எடுத்துரைக்கலாம். மணிவாசகரும் தன்னுடைய சிவபுராணத்தில் "நமசிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க" என்ற அடியினூடாக சிவபெருமானுடைய திருமேனிகளுட் சிறந்ததாகிய மந்திரத் திருமேனியைப் போற்றித் துதித்துள்ளார். மேலும் மணிவாசகர், "தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து... இனி என்னே உய்யுமாறு என்று எண்ணி ஐந்தெழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை..." (திருச்சதகம் 27) என்று பிறவிக்கடலின் ஆழத்தினை ஆழமற்றதாகக் கூடியதாக ஆக்கி இரட்சையாக / காப்பாக / அரநாக நின்று காப்பது எனக் கூறியுள்ளார். மந்திரத்திருமேனியினை வருமாறு விரிவாக எடுத்துரைக்கலாம்.

சி - சிறப்பு
வ - வனப்பு
ய - யாப்பு
ந - நடப்பு
ம - மறைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) சகளவடிவில் (உருவத் திருமேனி)

ந - நகரம் (கால்கள்)
ம - மகரம் (வயிறு)
சி - சிகரம் (தோள்கள்)
வ - வகரம் ((முகம்)
ய - யகரம் (தலை)

ஆ) சகளநிட்கள வடிவில் (அருவுருவத் திருமேனி)

ந நகரம் (கீழ்ப்பதுமம்)
ம மகரம் (கண்டம்)
சி சிகரம் (மேற்பதுமம்)
வ வகரம் (நாளம்)
ய யகரம் (லிங்கம்)

இ) நிட்கள வடிவில் (அருவத் திருமேனி)

ந நகரம் (சத்தியோசாதம்)
ம மகரம் (வாமதேவம்)
சி சிகரம் (அகோரம்)
வ வகரம் (தற்புருஷம்)
ய யகரம் (ஈசானம்)

சம்பந்தர் திருவைந்தெழுத்தின் சிறப்பினை தன்னுடைய திருக்கடைக்காப்பில் பின் வருமாறு கூறி வியந்துள்ளார்.

**"காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி**
**ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேதம் நான்கினு மெய்ப்பொரு ளாவது**
**நாதன் னாம நமச்சி வாயவே"** (திருமுறை 3.49.1)

தான் நின்ற மெய்நெறியில் இறுதியாக வேதங்கள் நான்காகிய இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகியவற்றினுள் மெய்ப்பொருளாக அமைவது நாதனுடைய திருநாமமாகிய திருவைந்தெழுத்தே எனச் சிறப்புற கூறியுள்ளார். இப்பதிகத்தினை பாடியே சிவப்பேற்றினை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அப்பர் பெருமானும் தன்னுடைய தேவாரத்தில் தனக்கு சமணர்களால் வந்தெய்திய துன்பங்களை பொடிப்பொடியாக்கிய திருவைந்தெழுத்தின் சிறப்பினை தன்னுடைய நமச்சிவாய பதிகத்தின் ஊடாக பின் வருமாறு கூறி வியக்கின்றார்.

**"சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே"** (திருமுறை 4:11.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக திருவைந்தெழுத்தின் சிறப்பினையும், தனக்கு சமணர்களால் வந்த துன்பத்திலிருந்து விடுபடும் உபாயமாக நமச்சிவாய மந்திரத்தினை கைக்கொண்டமை தெளிவாகின்றது. அப்பர் இப்பதிகத்தினூடாக "**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே**" என்ற அடிகளினூடாக கல்லைத் துணைக்கொண்டு சேர்த்துக் கட்டிக் கடலிலே தள்ளிவிட்டாலும் எம்பெருமானுடைய திருவைந்தெழுத்தே நமக்குத் துணையாகும் எனவும் கூறியுள்ளதோடு இப்பதிகப் பயனைத் தன்னுடைய 10ஆவது பாடலில் "**நாப்பிணை தழுவிய நமச்சிவாயப் பத்து ஏத்த வல்லார்தமக்கு இடுக்கண் இல்லையே**" என்ற அடிகளினூடாக நாவை இணைத்துத்தழுவிய திருவைந்தெழுத்தைப் பற்றிய இப்பத்துப் பாடல்களை ஓதவல்ல அடியார்களுக்கு எத்தகைய துயரங்களும் ஏற்படமாட்டாது எனவும் கூறியுள்ளார். இவ்விதமாக அப்பர் பெருமானும், சுந்தரர் பெருமானும் ஒவ்வொரு பதிகங்களிலும், சம்பந்தர் பெருமான் இரு பதிகங்களிலும், மாணிக்கவாசக சுவாமிகள் தன்னுடைய முதற்பதிகத்திலும் திருவைந்தெழுத்தினை சிறப்பித்துப் பாடியுள்ளார்கள். சுந்தரருடைய சரிதத்தின் ஊடாக "**நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே**" என்று பாடியதனூடாக சுந்தரர் தன்னுடைய நாவானது பரமகருணாநிதியாகிய எம்பெருமானுடைய திருநாம மந்திரமாகிய திருவைந்தெழுத்தினை உச்சரித்து பழகிவிட்டது என்பதை குறிப்பிட்டுள்ளமையினூடாக திருவைந்தெழுத்தின் மகிமை புலனாகின்றது.

திருக்களிற்றுப்படியாரில் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் திருவைந்தெழுத்தின் சிறப்பினை பின் வருமாறு கூறுகின்றார்.

**"அஞ்செழுத்து மேயம்மை யப்பர்தமைக் காட்டுதலால்**
**அஞ்செழுத்தை யாறாகப் பெற்றறிந்தே - யஞ்செழுத்தை**
**யோதப்புக் குள்ள மதியுங் கெடிலுமைகோன்**
**கேதமற வந்தருளிக்கும் கேள்."**

(தி.க.படியார்-26 ஆவது பாடல்)

திருவைந்தெழுத்தே சக்தியையும், சிவத்தையும் காட்டுகிறபடியினாலே அந்த மந்திரம் பேரின்பத்துக்கு வழியென்று கொண்டு ஒரு தானத்திலே அசைவற்றுத் தியானத்தோடேயிருந்து (பஞ்சாட்சரத்தை) திருவைந்தெழுத்தைச் செபிக்கத் தொடுத்தால் ஆன்ம போதங்கெடும், கெட்டவுடனே கர்த்தா வந்து குற்றமறக் கிருபை பண்ணுவான்; இவ்வுண்மையைக் கேட்பாயாக என்று கூறி பேரின்பத்திற்குரிய நுழைவாயிலாக அமைவதெனக் காட்டியுள்ளார்.

கொற்றவன்குடி உமாபதி சிவம் தன்னுடைய கொடிக்கவியில் வருமாறு கூறுகிறார்.

**"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்**
**பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சமுத்திப்**
**பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்**
**கூசாமற் காட்டக் கொடி"**

(கொடிக்கவி : 4ஆவது பாடல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு

| | | |
|---|---|---|
| அஞ்செழுத்து | :- | சிவாயநம |
| எட்டெழுத்து | :- | ஓம் ஹாம் ஹௌம் சிவாயநம |
| ஆறெழுத்து | :- | ஓம் சிவாயநம |
| நாலெழுத்து | :- | ஓம் சிவய, சிவயசி, சிவசிவ |
| பிஞ்செழுத்து | :- | வ (திருவருட்சத்தி) |
| பெருவெழுத்து | :- | சி (சிவம்) |
| பேசும் எழுத்து | :- | வ (சத்தி) |
| பேசாவெழுத்து | :- | சி |

ஆகிய திருவைந்தெழுத்தினை உச்சரித்தபின் சிவசக்தியை ஒருவர் சித்தத்தில் வைத்து சிவசக்தி தன் சொரூபத்தைக் காட்டி இரண்டறக் கலக்கும் நிலையை உணர்த்தக் கொடியேற்றப்படுகின்றது எனக் கூறுகின்றார்.

நாவலர் தன்னுடைய சைவ வினாவிடை பஞ்சாட்ஷரவியலில் திருவைந்தெழுத்தின் சிறப்பு, அதனை ஓத தகுதியுடையோர், ஓதக்கூடிய முறை போன்றவற்றை தெளிவாகக் காட்டியுள்ளார். மேலும், நாவலர் மது மாமிசமற்றவர்களே இச் சிறப்பு வாய்ந்த மந்திரத்தை ஓதத் தகுதியுடையோர் எனவும் குறிப்பிட்டுள்ளார். திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராண ஆனாயநாயனார் புராணத்தில் புல்லாங்களினூடாகத் திருவைந்தெழுத்தை இசையுடன் இசைப்பது இறையனாருக்குப் பிரியமானது எனவும், சிறப்புலி நாயனார் திருவைந்தெழுத்தை ஓதி இறையருள் பெற்றுள்ளவர் எனவும் பெரியபுராணத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்பாகும். சேரமான் பெருமாள் நாயனார், சுந்தரர் திருக்கைலாயம் சென்ற செய்தி கேட்டு தன் வெள்ளைக் குதிரையின் காதில் திருவைந்தெழுத்தை ஓதியே அவரிடம் சென்றார் என்ற செய்தியினூடாக முத்திக்குரிய சாதனமாக இம்மந்திரம் இருப்பதும் தெளிவாகின்றது. ஔவையார் தன்னுடைய விநாயகர் அகவலில் "**திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப் பொருந்தவே வந்துஎன் உளந்தனில் புகுந்து**" என்ற அடிகளினூடாக சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சைவசமயத்தில் தியானம் (அந்தர்யாகம்), சிவபூசை, வேள்வி அனைத்திலும் அத்தியாவசியமாக ஓதவேண்டிய மந்திரமாகவும், மந்திரங்கள் பல கோடியுண்டு, அனைத்து மந்திரங்களிலும் மூலமாய் விளங்கும் மந்திரமாகவும், யாகத்தில் அவிபாகம் எவ்விதம் சிறப்புப் பெறுகிறதோ அவ்விதம் சிறப்புப் பெறுகின்றதோடு, திருநீறானது புற அழுக்கினையும், பஞ்சாட்சரமாகிய திருவைந்தெழுத்து அக அழுக்கினையும் நீக்கி முக்திக்குரிய சாதனமாகவும், இன்னல்களைக் களைந்து எம்மைக் காக்கும் அரனாகவும் விளங்குவது சமயவரலாற்றினூடாகத் துணியமுடிகின்றது.

**"நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்**
**நமச்சிவாயவே நானறி விச்சையும்**
**நமச்சிவாயவே நாநவின் றேத்துமே**
**நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே"** (அப்பர்)

இளஞ்சைவப்புலவர் இரா. ஜீவன்பிரசான்.
மாத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறள் கதைகள்

# சொல்

**நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்**
**யாநலத்து உள்ளதூஉம் அன்று.**

- திருக்குறள் 641

**நாவன்மை என்னும் செல்வம் நனி சிறந்தது. அது மற்றெந்த நலத்தினும் அடங்குவதன்று.**

அதனை விளக்குவது இது.

பேசப்போனாயோ? சாகப்போனாயோ? என்பது பழமொழி; பேசுவதுதான் எல்லாவற்றிலும் கடினமானது. மரணத்தை அதற்கு உவமையாகச் சொல்வதால் பேசுவதின் அருமை தெற்றெனத் தெரிகின்றதல்லவா?

உயிர்களையெல்லாம் இரு வகையாகப் பிரித்தார்கள். ஒன்று உயர்திணை, மற்றொன்று அ்றிணை. அஃறிணை என்றால் உயர்வு அல்லாத திணை என்று பொருள். உயர்வு தாழ்வு என்று கூறுதல் வேண்டும். தாழ்ந்தவர்களைத் தாழ்ந்தவர்கள் என்றால் அவர்கள் மனம் நோகும். ஆதலால், அல்லாத திணை என்றார்கள். "கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி... மற்றவர் அறியா மாணிக்க மலை" என்றார் சேந்தனார். (திருவிசைப்பா 9.5.2) கல்லாதவர்களைக் கல்லாதவர்கள் என்று பேசுதல் கூடாது.

அதுபோல, உயர்திணை அஃறிணை என்று உயிர்களை இரு பிரிவாக்கி இலக்கண நூல் கூறும். இதன் அருமையை உன்னுக. உயர்திணை அஃறிணை என்ற இரு பகுதியின் பாகுபாடு யாது? வாய் திறந்து பேசுகின்ற உயிர்கள் உயர்திணை; வாய்பேசாத உயிர்கள் அஃறிணை. எனவே, உயர்வு வாய் மலர்ந்து பேசுவதனாலேயே அமைகின்றது.

இனி, அந்தப் பேச்சு எப்படி அமைய வேண்டும் என்பதைச் சிந்தித்து முடிவு கட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பேச்சுக்கு எட்டு அங்கங்கள் உண்டு; அஷ்டாங்க யோகம் என்றும், அஷ்ட புஷ்பம் என்றும் கூறுவது போல், பேச்சும் எட்டுவித உறுப்புக்களையுடையது.

பேச்சுக்கு உண்மை, நன்மை, அன்பு, நிதானம், இனிமை, ஆழம், சமயமறிதல், சபையறிதல் என்ற இந்த எட்டு தன்மைகள் அமைதல் வேண்டும்.

1. உண்மையே பேசுக.
2. நன்மையே பேசுக.
3. அன்பாகப் பேசுக.
4. நிதானமாகப் பேசுக.
5. இனிமையாகப் பேசுக.
6. ஆழமுடையதாக சிந்தித்துப் பேசுக.
7. சமயம் அறிந்து பேசுக.
8. சபையறிந்து பேசுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவதெல்லாம் பேச்சாகாது. பேச்சு ஒரு சிறந்த கலை.

சொற்செல்வம் என்றும் இதற்குப் பெயர். சொல்லின் செல்வராக விளங்கினார் அநுமந்தர். சொல்லுக்கு உள்ள ஆற்றல் வில்லுக்கும் கல்லுக்கும் கிடையாது.

காற்றினும் கடிய வேகமுடையது சொல். அதனால் கம்பநாடர், "சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம்" என்கின்றார்.

நாம் கடிதங்கள் எழுதும்போது நலம் என்று எழுதுகின்றோம். அவ்விடம் நலங்களை எழுதுங்கள் என்றும் எழுதுகின்றோம். நலமறிய விரும்புகின்றோம். நலங்கள் பல; மனை நலம், மக்கள் நலம், தன நலம், மன நலம், இன நலம், பிணியிலா நலம், நில நலம், உணவு நலம்; இப்படிப் பல நலன்கள் உண்டு. அவற்றுள் தலையாய நலம் நா நலம்.

எந்நலத்தினும் உயர்ந்தது சொன்னலம். இச்சொன்னலம் பன்னலமும் பயக்கும். சொல்லிலே இறைவன் உறைகின்றான்.

"இறைவன் எங்கே இருக்கின்றான்?" என்று இரணியன் வினாவிய வினாவுக்குப் பிரகலாதர், "சொல்லினும் உளன்" என்று விடை பகர்ந்தார்.

சொல்லானது நலன்களின் கருவூலம் என உணர்க.

இனி, அந்தச் சொல்லின் உறுப்புக்கள் எட்டு என்று முன்னே கண்டோம் அல்லவா? அதனைப் பற்றி நினைவு செய்தல் வேண்டும்.

**முதலாவது:**

சொல் உண்மையுடன் கூடியதாக இருக்க வேண்டும்.

வேதம் தொடங்கும்போதே "சத்யம்வத" என்று கூறுகின்றது. 'சத்தியத்தைப் பேசு' என்பது இதன் பொருள்.

சத்தியமே நித்தியம். கடவுள் சத்திய வடிவானவர். சத்திய உபாசனை புரிபவர் நித்திய வாழ்வு பெறுவர்.

**"பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே**
**பொய்யிலா மெய்யர் அறிவில்**
**போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப்**
**போக்குவர வற்றபொரு ளே"** என்கின்றார் தாயுமானார்.

பயிருக்கு முள்வேலி, உயிருக்கு உண்மை வேலி.
சத்தியத்தால் உயர்ந்தவன் அரிச்சந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியத்திற்காகத் தசரதர் தன் உயிரையே தியாகஞ் செய்துவிட்டார்.

காணாத முடியைக் கண்டேன் என்று பொய்யுரை புகன்ற பிரமதேவருக்கு ஆலயம் இல்லாத குறைவு ஏற்பட்டது. பொய்க்கரி புகன்ற தாழை சிவ பூசைக்குப் பயன் பெறாததொழிந்தது.

ஆகவே, உண்மையையே உரைக்க.

**இரண்டாவது:**

நன்மையே பேசுக. உண்மை பேசினால் மட்டும் சிறப்பில்லை. உண்மையில் நன்மை கலந்திருக்க வேண்டும். நன்மை விரவாத உண்மை உயர்வு பெறாது.

ஒருவன் ஒரு கோயிலில் ஜெபம் புரிந்து கொண்டிருக்கின்றான். ஒரு பெண்மணி வழிபாட்டுக்கு வந்தாள். ஒரு குடியன் குண்டாந்தடி எடுத்துக்கொண்டு அவளைப் புடைக்கும்பொருட்டு வந்து "ஐயா இங்கே வந்த பெண் எங்கே?" என்று வினாவினான். இங்கே உண்மை பேசினால் அந்த மங்கை அடிபட்டுத் துன்புறுவாள். ஆதலால், இங்கே உண்மைக்கு உயர்வில்லை. நன்மையாகப் பேசவேண்டும். இம்சை விளையும் உண்மை, உண்மையாகாது.

**மூன்றாவது:**

அன்புடன் பேசுக. அன்பு கலவாத - இனிமையோ கனிவோ இல்லாத பேச்சு நன்மையாகாது.

யாரிடமும் அன்பு கலந்து பேசுதல் வேண்டும். அன்புடைய பேச்சு செவியைக் குளிர்விக்கும். சிந்தையைக் குளிர்விக்கும். ஊன், உள்ளம், உணர்வு, உயிர் எல்லாவற்றையும் குளிர்விக்கும்.

மலருக்கு மணம் இன்றியமையாதது போல், வாழ்வுக்கு ஒழுக்கம் இன்றியமையாதது போல், பேச்சுக்கும் அன்பு இன்றியமையாதது. ஆகவே, பகைவனிடத்தும் அன்பாகப் பேசுதல் வேண்டும். முதல் நாள் போரில் ஸ்ரீராமர் இராவணனிடம் பேசிய பேச்சு இன்றும் உன்னுந்தோறும் உள்ளத்தை உருக்குகின்றது அல்லவா?


**ஆளை யாஉனக் கமைந்தன மாருதம் அறைந்த**
**பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு**
**நாளை வாவென நல்கினான் நாகிளங் கமுகின்**
**வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்.** கம்பராமாயணம்.

**நான்காவது:**

நிதானமாகப் பேசவேண்டும் வெடு வெடு என்றும், வேகமாகவும், விமான வேகத்திலும் பேசுதல் கூடாது. பேச்சில் அமைதியிருக்க வேண்டும். உணவு உண்ணும் போது அவசரம் அவசரமாக விழுங்கக் கூடாது. இறைவனுக்கு மலர் வேகமாக அர்ச்சிக்கக் கூடாது. அதுபோல் மெல்ல நிதானமாகப் பேசிக் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய், கேளாரும் வேட்ப மொழிதல் வேண்டும். இப்படிப் பேசும் பெருமையுடையவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இராமேஸ்வரம் அக்னி தீர்த்தத்தில் எடுத்த மணலால் இலிங்கம் அமைத்து வழிபட்டு அலகாபாத் திரிவேணி சங்கமத்திலே இலிங்கத்தை விடுதல்.




அயோத்தியின் புனித நதியான சரயு நதியில் நீராடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






காசி விஸ்வநாதர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயாவில் பிதிர் கருமம் செய்தல் →







தொங்கு இலட்சுமணர் பாலம், ரிஷிகேஷ்.




காயா சிரார்த்தத்திலே சாட்சியாகவுள்ள அட்சய வடம் (ஆலமரம்)



ஹரித்துவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலட்சுமணர் பாலம், ரிஷிகேஷ்.


திருமணஞ்சேரி


இராமேஸ்வரம்
கடற்கரையில் தர்ப்பணம் செய்தல்


இராமநாதசுவாமி


அக்கினி தீர்த்தத்தில் நீராடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமர் என உணர்க.

**எல்லாம் உணர்ந்தும் வியாதன் இயம்பியவச்**
**சொல்லாலே நாவயர்ந்தான் சோமேசா - வல்லமையால்**
**யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்கப் பட்டு** -சோமேசர் முதுமொழி வெண்பா

அடக்கமின்றிப் பேசிக் கெட்டவர் பலர். 'யாராலே கெட்டான் என்றால் நோராலே கெட்டான்' என்று தெலுங்கிலே ஒரு பழமொழி.

இராச சூயம் என்ற வேள்வி முடிவடைந்தபின் துரியோதன் தனது துணைவர்களுடன் தருமருடைய அழகிய சபா மண்டபத்துக்கு வந்தான். குளமில்லாத இடத்தைக் குளம் என்றும், குளமுள்ள இடத்தைக் குளமில்லாத இடமென்றும் கருதி, ஆடையைத் தூக்கியும் குளத்தில் வீழ்ந்தும் இடர்ப்பட்டான். அப்போது திரௌபதி "இவன் தந்தைக்குத்தான் விழியில்லையே? இவனுக்கும் விழியில்லையோ? என்று அவையில் நாவடக்கமின்றிச் சொன்னாள். அதன் விளைவுதான் பாரதத்தில் திரௌபதியும் பாண்டவரும் இடர்ப்பட்டது. ஆகவே, சொல்லை அளந்து பேசவேண்டும். பிறர் மனம் நோகுமாறு படபடப்பாகப் பேசுதல் ஒருபோதும் கூடாது.

**ஐந்தாவது:**

இனிமையாகப் பேசுக. பேச்சுக்கு உயிர்நாடி இனிமை. இனியவை கூறல் என்ற ஓர் அதிகாரமே வகுத்தார் திருவள்ளுவர். பணிவும் இன்சொல்லுமே ஒருவனுக்குச் சிறந்த ஆபரணம். இவையன்றி வேறு அணிகலன்கள் இல்லை என்றார்.

பாண்டவர்கள் மகாப் பிரஸ்தானம் என்ற ஒரு விரதத்தை மேற்கொண்டு சொர்க்கம் போகின்ற போது பீமன் கீழே விழுந்து மாண்டுவிட்டான். "ஏன் அவன் விழுந்தான்?" என்று ஜெனமேஜயன் கேட்டான். "இன்சொல் இல்லாத ஒரே ஒரு குற்றத்தினால் பீமன் விழுந்து விட்டான்" என்றார் வைசம்பாயனர்.

'உலகத்தை எல்லாம் வசப்படுத்தும் உபாயம் இன்சொல்' என்று கண்ணபிரான் கூறுகின்றார்.

**ஆறாவது:**

ஆழமுடையதாகச் சிந்தித்துப் பேசுக. பேச்சில் ஆழம் இருக்கவேண்டும். அது சிந்தித்துப் பேசும் பேச்சில் சித்திக்கும்.

சகுந்தலை தன் மகன் பரதனுடன் துஷ்யந்தனுடைய அவைக்குச் சென்றாள். துஷ்யந்தன், பெண்ணே! நீ யார்? உன் கணவன் யார்? இம்மைந்தன் யாவன்? இங்கு ஏன் வந்தாய்?" என்றெல்லாம் வினாவினான். இத்தனை வினாக்களுக்கும் ஆழமாகவும், அழகாகவும், சிந்தித்தும் சகுந்தலை சொன்ன விடை:

"மகனே பரதா! உன் தந்தையை வணங்கு" என்றாள். மன்னவன் வினாவிய வினாக்கள் அத்தனைக்கும் இதில் விடையிருப்பதை ஆழ்ந்து சிந்திக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏழாவது:**

சமயமறிந்து பேசுக. சமய சந்தர்ப்பம் அறிந்து பேசுவது நமக்கு மிகுந்த நன்மைகளைக் கொடுக்கும்.

ஒருவன் மகிழ்ச்சியாக இருக்கும்போதும், நமது தயவை நாடும்போதும் பேசிப் பயன்பெற வேண்டும்.

ஒரு புலவர் அம்பிகையிடம் கூறுகின்றார்.

"தேவீ! நான் பாவி. அநேக பாவங்கள் செய்துவிட்டேன். அப்பா என்மீது கோபிப்பார். நீ நல்ல தருணம் பார்த்துக் கூறி, என் குறைகளை மன்னிக்குமாறு செய்" என்று பாடுகின்றார்.

**ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுன் அங்கிருந்து**
**நீமுத்தந் தாவென் றவர்கொஞ்சும் வேளையில் நித்தநித்தம்**
**வேய்முத்த ரோடென் குறைகளெல்லாம் மெல்லமெல்லச் சொன்னால்உன்**
**வாய்முத்தம் சிந்தி விடுமோநெல் வேலி வடிவன்னையே.**

தலைவனிடம் சமயமறிந்து குறைகளைக் கூறிப் பணியாளர் நலம்பெற வேண்டும். மனைவி கணவனாரிடம் நேரம் அறிந்து கூறிக் குறை நீக்கி நிறைவு பெற வேண்டும். குழம்பு - இரசம் பக்குவத்தில் தாளிதம் புரிவதுபோல் நேரம் அறிந்து பேசுவோர் சாரம் பெறுவர்.

**எட்டாவது:**

அவையறிந்து பேசுக. அவையறிந்து கூறுந் திறம் விரிவுரையாளர்கட்கு மிகமிக இன்றியமையாதது. எவையறிந்தாலும் அவையறிதல் வேண்டும். அவையறியாது பேசும் பேச்சும், நோயறியாது கொடுக்கும் மருந்துபோல் தீமை பயக்கும். ஆதலால், அவையறிந்து பயனுடைய சொற்களால் விளக்கமாகவும், சுருக்கமாகவும், உருக்கமாகவும் பேச வேண்டும்.

எனவே, உண்மையாகவும், நன்மையாகவும், அன்பாகவும், நிதானமாகவும், இனிமையாகவும், ஆழமாகவும், சமயமறிந்தும், சபையறிந்தும் பேசுக.

முடிவில் பேசாமல் இருந்தும் பழக வேண்டும்.

**"ஆசா நிகளந் துகளா யினபின்**
**பேசா அநுபூ திபிறந் ததுவே"** - கந்தரநுபூதி

தெய்வத்திரு திருமுருக
கிருபானந்த வாரியார் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி

# யாப்பிலக்கணம் (வினாவும் விடையும்)

## உறுப்பியலில் சீர்

29. **கனிச் சீர் உண்டாகியது எவ்வாறெனக் கூறுக?**

மாச்சீர் இரண்டுடன் (தேமா, புளிமா) "கனி" என்ற நிரையசை சேர்வதாற்

1) தேமாங்கனி
2) புளிமாங்கனி

} என்னும் 2 கனிச் சீர் (மூவசை) வாய்பாடுகளும் விளச்சீர் இரண்டோடும் அதாவது.

கூவிளம்
கருவிளம்

} இவ்விரண்டோடும் "கனி" என்னும் நிரையசை சேர்வதால் மூவசைச் சீருக்குரிய

3) கூவிளங்கனி
4) கருவிளங்கனி

} என 2 கனிச்சீர் வாய்பாடுகளும் உண்டாகின்றன.

30. **மூவசைச் சீர் பெற்ற வாய்பாடுகள் எட்டிற்கும் உதாரணந்தந்து அதன் அசையையும் பிரித்துக் காட்டுக?**

| மூவசைச் சீர் வாய்பாடு | | உதாரணம் |
|---|---|---|
| 1) தேமாங்காய் | → | மேதாவி |
| 2) புளிமாங்காய் | → | அறிவாளன் |
| 3) கூவிளங்காய் | → | தேன்மொழியாள் |
| 4) கருவிளங்காய் | → | அடியழித்தல் |
| 5) தேமாங்கனி | → | சீனாவெடி |
| 6) புளிமாங்கனி | → | முடிசூடினான் |
| 7) கூவிளங்கனி | → | ஆர்த்தெழுந்தனர் |
| 8) கருவிளங்கனி | → | வருவிருந்தினர் |

இங்கு காட்டப்பட்ட உதாரணங்களைப் பின்வருமாறு அசை பிரித்துக் காட்டலாம்.

| உதாரணம் | | அசை |
|---|---|---|
| 1) மேதாவி | - - - | மே - நேர், தா - நேர், வி - நேர். |
| 2) அறிவாளன் | - - - | அறி - நிரை, வா - நேர், ளன் - நேர். |
| 3) தேன்மொழியாள் | - - | தேன் - நேர், மொழி - நிரை, யாள் - நேர். |
| 4) அடியழித்தல் | - - - | அடி - நிரை, யழித் - நிரை, தல் - நேர். |
| 5) சீனாவெடி | - - - | சீ - நேர், னா - நேர், வெடி - நிரை. |
| 6) முடிசூடினான் | - - | முடி - நிரை, சூ - நேர், டினான் - நிரை. |
| 7) ஆர்த்தெழுந்தனர் | - - | ஆர்த் - நேர், தெழுந் - நிரை, தனர் - நிரை. |
| 8) வருவிருந்தினர் | - - | வரு - நிரை, விருந் - நிரை, தினர் - நிரை. |

31. **நாலசைச் சீர் என்றால் என்ன?**

இங்கே ஒவ்வொரு சீர்களையும் எடுத்துக் கொண்டால் அதிலே நான்கு அசைகள் இருப்பதைக் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. **நாலசை சீரில் (ஒவ்வொருசீரும் நாலசை உள்ளது) இதன் இறுதியில் 3ஆம், 4ஆம் அசைகள் "தண்பூ" (தண்-நேர், பூ-நேர்) என அமையும் வாய்பாடுகள் நான்கினையும் தருவதுடன் அசையையும் பிரித்துக்காட்டவும்?**

வாய்பாடு அசை

1) தேமாந்தண்பூ ⟶ தே - நேர், மாந் - நேர், தண் - நேர், பூ - நேர்.
2) புளிமாந்தண்பூ ⟶ புளி - நிரை, மாந் - நேர், தண் - நேர், பூ - நேர்.
3) கூவிளந்தண்பூ ⟶ கூ - நேர், விளந் - நிரை, தண் - நேர், பூ - நேர்.
4) கருவிளந்தண்பூ ⟶ கரு - நிரை, விளந் - நிரை, தண் - நேர், பூ - நேர்.

இவற்றை நோக்குமிடத்து மாச்சீர் (ஈரசைச் சீர்) விளச்சீர் (ஈரசைச் சீர்) இவற்றின் வாய்பாட்டினைத் தெரிந்து கொண்டால் அதாவது தேமா, புளிமா, கூவிளம், கருவிளம் என்பனவற்றுடன் தனித்தனியே தண்பூ என்பதைச் சேர்க்க மேற்காட்டிய வாய்பாட்டினைப் பெறமுடிகிறது. இவ்வாய்பாடுகளுக்குரிய அசைகளை இதற்கு முன்னர் அசை பற்றி எழுதப்பட்ட வினா விடைகளைத் தெரிந்து கொள்வதன் மூலம் இலகுவில் பிரிக்க முடியும்.

33. **நாலசைச் சீருக்குரிய "நறுநிழல்" என இறுதியில் முடியும் வாய்பாடுகள் நான்கினையும் எழுதிக்காட்டி அதற்குரிய அசையையும் பிரித் தெழுதுக?**

தேமா, புளிமா என்ற ஈரசைச் சீருக்குரிய வாய்பாடுகளை ஒன்றன்பின் ஒன்றாக நான்கினையும் எழுதி (அதாவது மாச்சீர் 2, விளச்சீர் 2) அவற்றுடன் "நறுநிழல்" (நறு-நிரையசை, நிழல்-நிரையசை) என்று தனித்தனியே ஒவ்வொன்றிற்கும் எழுதிக் கொள்வதால் நாலசைச் சீருக்குரிய "நறுநிழல்" என இறுதியில் முடியும் வாய்பாடுகள் நான்கினையும் பெற்றுக்கொள்ளலாம்.

1) தேமா + நறுநிழல் ⟶ தேமாநறுநிழல்
2) புளிமா + நறுநிழல் ⟶ புளிமாநறுநிழல்
3) கூவிளம் + நறுநிழல் ⟶ கூவிளநறுநிழல்
4) கருவிளம் + நறுநிழல் ⟶ கருவிளநறுநிழல்

இவ்விதம் பெறப்பட்ட வாய்பாடுகளின் அசைகளைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

1) தே - நேர், மா - நேர், நறு - நிரை, நிழல் - நிரை.
2) புளி - நிரை, மா - நேர், நறு - நிரை, நிழல் - நிரை.
3) கூ - நேர், விள - நிரை, நறு - நிரை, நிழல் - நிரை.
4) கரு - நிரை, விள - நிரை, நறு - நிரை, நிழல் - நிரை.

34. **நாலசைச் சீருக்குரிய "நறும்பூ" என இறுதியில் முடியும் வாய்பாடுகள் நான்கினையும் எழுதி அதற்குரிய அசையையும் பிரித்துக் காட்டுக?**

1) தேமா + நறும்பூ ⟶ தேமாநறும்பூ
2) புளிமா + நறும்பூ ⟶ புளிமாநறும்பூ
3) கூவிளம் + நறும்பூ ⟶ கூவிளநறும்பூ
4) கருவிளம் + நறும்பூ ⟶ கருவிளநறும்பூ

இவ்விதம் பெறப்பட்ட "நறும்பூ" வை இறுதியாகக் கொண்ட நாலசைச் சீர் வாய்பாட்டைப் பின்வருமாறு அசை பிரிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) தே - நேர், மா - நேர், நறும் - நிரை, பூ - நேர்.
2) புளி - நிரை, மா - நேர், நறும் - நிரை, பூ - நேர்.
3) கூ - நேர், விளம் - நிரை, நறும் - நிரை, பூ - நேர்.
4) கரு - நிரை, விளம் - நிரை, நறும் - நிரை, பூ - நேர்.

**35. நாலசைச் சீருக்குரிய "தண்நிழல்" என இறுதியில் முடியும் வாய்பாடுகள் நான்கினையும் எழுதி அதற்குரிய அசையையும் பிரித்துக் காட்டுக?**

1) தேமா + தண்ணிழல் ⟶ தேமாந்தண்ணிழல்
2) புளிமா + தண்ணிழல் ⟶ புளிமாந்தண்ணிழல்
3) கருவிளம் + தண்ணிழல் ⟶ கருவிளந்தண்ணிழல்
4) கூவிளம் + தண்ணிழல் ⟶ கூவிழந்தண்ணிழல்

இவ்விதம் பெறப்பட்ட "தண்ணிழல்" என்பதை இறுதியாகக் கொண்டு முடியும் நாலசைச் சீர் வாய்பாட்டை பின்வருமாறு அசை பிரிக்கலாம்.

1) தே - நேர், மாந் - நேர், தண் - நேர், ணிழல் - நிரை.
2) புளி - நிரை, மாந் - நேர், தண் - நேர், ணிழல் - நிரை.
3) கரு - நிரை, விழந் - நிரை, தண் - நேர், ணிழல் - நிரை.
4) கூ - நேர், விழந் - நிரை, தண் - நேர், ணிழல் - நிரை.

**36. நாலசைச் சீர வாய்பாடுகள் 16ஐயும் எழுதி அதன் பெயரையும் தருக.**

| | | |
|---|---|---|
| தண்ணிழல் :- | தேமாந்தண்ணிழல்<br>புளிமாந்தண்ணிழல்<br>கருவிழந்தண்ணிழல்<br>கூவிளந்தண்ணிழல் | 4 |
| தண்பூ :- | தேமாந்தண்பூ<br>புளிமாந்தண்பூ<br>கருவிழந்தண்பூ<br>கூவிளந்தண்பூ | 4 |
| நறுநிழல் :- | தேமாநறுநிழல்<br>புளிமாநறுநிழல்<br>கருவிளநறுநிழல்<br>கூவிளநறுநிழல் | 4 |
| நறும்பூ :- | தேமாநறும்பூ<br>புளிமாநறும்பூ<br>கருவிளநறும்பூ<br>கூவிளநறும்பூ | 4 |

(குறிப்பு: தண்மை + நிழல் தண்ணிழல் எனவும்
நறு + நிழல் நறுநிழல் எனவும் புணர்ச்சி பெறும்.)

தொடரும்...

சித்தாந்தரத்தினம் செல்வி. வ. தேவராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி.

# சைவசமயம்

## மாணவர் அறிவுப் பெட்டகம்

### (வினா விடை)

**31. சமய விழுமியங்களை மாணவர் மனங்களில் உருவாக்கும் இடங்கள் எவை?**
வீடு, பாடசாலை, சமூகம் என்பன.

**32. பாடசாலைகளில் சமயப் போட்டிகள் நடாத்தப்படுவதனால் ஏற்படும் நன்மைகள் எவை?**

மாணவர்களின் திறமைகளும், ஆற்றல்களும் வெளிக்கொணரப்படும். பக்தி உணர்வு தூண்டப்படும். சமயம் பற்றிய தெளிவு ஊட்டப்படும். கலை கலாசார விழுமியப் பண்புகள் வளர்க்கப்படும்.

**33. பாடசாலைகளில் எவ்வகையான போட்டிகள் இடம் பெறுகின்றன?**
பண்ணிசைப்போட்டி, சமய அறிவுப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, நாடகப்போட்டி, கோலம்போடும் போட்டி, மாலைகட்டல் போட்டி, ஆன்மீகஉரைப் போட்டி, கதாப்பிரசங்கம், விவாதம், நற்சிந்தனை போன்றன.

**34. நாயன்மார்களின் குருபூசை நடாத்துவதினால் ஏற்படும் நன்மைகள் யாவை?**
நாயன்மாரின் தொண்டுகள், சமயத்துக்காக அவர்கள் தம்மை அர்ப்பணித்தவிதம் என்பவற்றை அறியவும், அவர்கள்வழியில் நின்று நாமும் சமூக சமயத் தொண்டாற்ற வேண்டும் என்ற உத்வேகம் ஏற்படவும் வழி சமைத்துக் கொடுக்கும்.

**35. i) ஐவகைச் சக்திகள் யாவை? ii) ஏன் பலவாகக் கொள்ளப்படுகிறது?**

i) ஐவகைச்சக்திகள்: பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி.

ii) சக்தி ஒன்றே. அது காரிய வேறுபாட்டால் இவ்வாறு பல பெயர்களைப் பெறுகிறது.

**36. ஆதிசக்தி தொழிலாற்றும் போது என்ன பெயர் பெறும்?** திரோதான சக்தி.

**37. இறைவனின் திருமேனியாக அமையும் சக்தி எது?**
திருவருட்சக்தி. இது சிவத்தோடு பிரிப்பின்றி தாதான்மிய நிலையில் நிற்கும்.

**38. உயிர்களின் கன்மங்களை நுகரவைக்கும் சக்தி எது?**
திரோதானசக்தி.

**39. பக்குவம் முதிர்ந்த ஆன்மாக்களுக்குச் சிவத்தைக் காட்டும் சக்தி எது?**
திருவருட்சக்தி.

**40. உயிருக்கு அணு, பசு, ஆன்மா என்ற பெயர்கள் வரக் காரணம் என்ன?**

அணு: உயிர் ஆணவத்தால் அணுத்தன்மை பெற்றநிலையில்

பசு: உயிர் மும்மலங்களால் பந்திக்கப்பட்டு பாசத்தோடு சம்பந்தப்பட்டிருக்கும் நிலையில்.

ஆன்மா: உயிர் வியாபக அறிவைப் பெற்ற நிலையில்.

**41. மூவகை உயிர்களும் எவை?**

சகலர்: ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களுடைய உயிர்.

பிரளயாகலர்: ஆணவமும், கன்மமுமாகிய இருமலங்களுடைய உயிர்.

விஞ்ஞானகலர்: ஆணவம் ஒன்றினால் பிணிக்கப்பட்ட உயிர்.

**42. ஆன்மாவின் மூவகை அவத்தை / காரணஅவத்தைகள் யாவை?**
கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை (தொடர்ச்சி 28ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய புராணத் தொடர்..

# இயற்பகை நாயனார்

சோழமண்டலத்திலே காவிரி நதி சமுத்திரத்தோடு கலத்தலால் காவேரிசங்கமம் எனப் பெயர் கொண்ட விசேட தீர்த்தம் பொருந்திய காவிரிப்பூம் பட்டினத்திலே இயற்பகையார் பிறந்தார். வணிகர் குலத்தில் பிறந்த இவர் சிவபக்தியும், வள்ளல் தன்மையும் கொண்டவர். சிவனடியார்கள் வந்து கேட்டால் எதனையும், மனம் உவந்து கொடுக்கும் தன்மை கொண்டு வாழ்ந்தவர். உடம்பும், உறுபொருளும் சிவனடியாருக்கே எனக் கொண்டு வாழ்ந்தவர் இயற்பகையார்.

திருக்கைலாய பதியாகிய எம்பெருமான் இயற்பகையாரின் கொடையையும், சிவபக்தியையும் உலகிற்கு எடுத்துக்காட்ட திருவுளங்கொண்டு, தூயவெண்ணீறு பூண்டு திருமேனி பிரகாசிக்க, வேதியராக காவிரிப்பூம் பட்டினம் சென்று, இயற்பகையாரின் மாளிகையை அடைந்தார்.

இயற்பகையார் அன்பினோடு அவரை நமஸ்கரித்து "சுவாமி தேவரீர் இங்கு எழுந்தருளியது பூர்வபுண்ணியத்தில் அடியேன் செய்த தவத்தினாற் போலும்" என்றார். அதற்கு வேதியர் "ஐயனே நீ தில்லைக்கூத்தனின் அடியவர்க்கு கேட்டதெல்லாம் மறுக்காமல் கொடுப்பவனாமே! யானும் உன்பால் உள்ள ஒரு பொருளைப் பெறவந்தேன்" என்றார்.

'இயற்பகையார்' என்ற நாமத்தின் பொருளை நோக்கினால் உரிமையில்லாத பொருட்களையெல்லாம் எம்முடையது என உரிமை கோருவது உலக இயற்கை. அந்த இயல்புக்கு மாறாக இவர் வாழ்ந்ததால் இயற்பகையார் எனும் நாமம் பெற்றார்.

'உம்முடைய மனைவியை வேண்டிவந்தேன்' என்றார் வேதியர். இயற்பகையார் மிக்க மகிழ்ச்சியுடன் 'சுவாமி, தேவரீர் அடியேனிடத்தில் உள்ள பொருளையே விரும்பிக் கேட்டது அடியேனுடைய பாக்கியம்' என்று கூறி தன் மனைவியை நோக்கி "நான் இன்று உன்னை இந்தச் சிவனடியாருக்குக் கொடுத்துவிட்டேன்" என்றார். மனைவியார் முதலில் அதிர்ச்சியுற்றும் பின்னர் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு "பிராண நாயகரே, நீர் கட்டளையிட்டது எதுவோ அதையே நான் செய்வேன்" என்று கூறித் தன் கணவரை வணங்கி நின்றாள். பின்னர் வேதியரை நோக்கி, சுவாமி! இனி யான் தங்கட்குச் செய்யவேண்டிய பணியாது? என்றார். வேதியர், இயற்பகையாரை நோக்கி, "நான் இப்பெண்ணை என்னுடன் அழைத்துச் செல்லும்போது உமது சுற்றத்தவர், அயலவரும் என்னைச் சும்மா விடமாட்டார்கள், ஆதலால் நீரும் எம்முடன் துணைக்கு வருக" என்றார். அதற்கு இயற்பகையாரும் அடிபணிந்து அவர்களை அழைத்துச் சென்றார். இதனைக்கண்ட உறவினர்களும், அயலவரும், 'இயற்பகை பைத்தியத்தினாலே தன்மனைவியைக் கொடுத்தானாயினும், அவளை ஒருவன் கொண்டு போவது நீதியா?" என்று தம் மரபுக்கு வரும் பெரும் பழியை நீக்கிக் கொள்வதற்காக அவர்களைத் துரத்தி, வில், வாள், முதலியவற்றினால் தாக்க முயன்றனர்.

சிவனார் பயந்தவர் போல் அம்மையாரை நோக்கினார். அவரும் பணிவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுவாமி நீங்கள் அஞ்சவேண்டாம். இயற்பகையார் வெல்லுவார்" என்றார். இயற்பகையார் சினம் கொண்டு தம்மை எதிர்த்தவர்களை வாள் கொண்டு வெட்டியும், சிலரைக் காயப்படுத்தியும், சிலரைக் கொன்றும் விட்டார். பின்னர் வந்த வேதியரையும், மனைவியையும் ஊர் எல்லைவரை விட்டுவிட்டு, வேதிய அன்பரே நீர் இனித் தொடர்ந்து செல்லலாம் என்று கூறினார். அப்பொழுது இயற்பகையாரை நோக்கி வேதியர் ஓலமிட்டார்.

"இயற்கை முனிவா ஓலம்! ஈண்டு நீ வருவாய் ஓலம்!
அயற்பிலாதனே ஓலம்! அன்பனே ஓலம்! ஓலம்!
செயற்கரும் செய்த தீரனே ஓலம்! என்றார்.

இந்த ஓலத்தைச் செவிமடுத்த இயற்பகையார் திரும்ப ஓடிவந்த போது வேதியர் மறைந்தருளினார். மனைவியார் மாத்திரம் நிற்பதைக் கண்டார். ஆகாயத்தில் பார்வதி சமேதராகி இடபவாகனத்தில் எழுந்தருளிவந்த திருக்கைலாசபதியைக் கண்டார். ஆராமையினால் உடனே விழுந்தார். எழுந்து தோத்திரம் பண்ணினார். இறைவன் அவரை நோக்கி, " நம்மேலும் நம்முடைய அடியவர்கள் மேலும் நிஷ்களங்க மாகிய அன்பு வைத்த இயற்பகையே நீ, உன் மனைவியுடன் நம்முடன் வா" எனத் திருவாய் மலர்ந்தார். விண்ணவர் பூமாரி பொழிய, இயற்பகையார் தன் தெய்வக் கற்பின் மங்கையுடன், சிவலோகத்தை அடைந்து பேரின்பத்தை அனுபவித்து வாழ்ந்திருந்தார். யுத்தத்தில் இறந்த அவர்கள் பந்துக்களும் வானுலகம் சென்று நற்பேறடைந்தனர்.

"இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்..." சுந்தரர் பெருமான்

சித்தாந்த இரத்தினம் பத்மினி ராஜேந்திரா.

---

26ஆம் பக்கத் தொடர்ச்சி..

**43. உயிர்களின் காரிய அவத்தைகள் யாவை?**

சாக்கிரம் (நனவு), சொப்பனம் (கனவு), சுழுத்தி (உறக்கம்), துரியம் (பேருறக்கம்), துரியாதீதம் (உயிர்ப்படங்கல்).

**44. உயிருக்குரிய ஐந்து சாரீரங்களும் எவை?**

1) காரணசரீரம்: அசுத்தமாயா தத்துவமான வித்தியா தத்துவம் ஏழில் மாயாதத்துவத்தினாலான சரீரம்.
2) கஞ்சுகசரீரம்: வித்தியாதத்துவங்களில் காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்துடன் கூடிய புருடதத்துவ சரீரம்.
3) குணசரீரம்: பிரகிருதி மாயா தத்துவங்களுள் ஒன்றான குணதத்துவத்தாலான சரீரம்.
4) சூக்குமசரீரம்: (புரியட்டகாயம்) தன்மாத்திரைகளான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தும் மனம், புத்தி, அகங்காரம்(சித்தம் தவிர்ந்த) அந்தக்கரணங்கள் மூன்றுமாகிய எட்டுத்தத்துவங்களாலானது.
5) தூலசரீரம்: ஐம்பூதங்கள் 5 ( நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்)
ஞானேந்திரியங்கள் 5 (மெய், வாய், கண், மூக்கு, செவி)
கன்மேந்திரியங்கள் 5 (கால், கை, வாய், எருவாய், கருவாய்)
ஆகிய 15 தத்துவங்களாலான சாரீரம்.

தொடரும்..

சைவப்புலவர், சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர்,
தர்மாசிரியர். சாமித்தம்பி பொன்னுத்துரை B.A. (சிறப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி

# அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம்
# திருநாவுக்கரசு நாயனார்
# கோயில் திருவிருத்தம்

4 ஆம் திருமுறை
பண் : கொல்லி

சிவனுருவம்
திருச்சிற்றம்பலம்

**பாளை யுடைக்கமு கோங்கிப் பன்மாட நெருங்கியெங்கும்**
**வாளை யுடைப்புனல் வந்தெறி வாழ்வயல் தில்லை தன்னுள்**
**ஆள உடைக்கழற் சிற்றம் பலத்தரன் ஆடல்கண்டாற்**
**பீளை யுடைக்கண்க ளாற்பின்னைப் பேய்த்தொண்டர் காண்பதென்னே 1**

(ப - ரை) பாளை உடை கமுகு - பாளைகளையுடைய கமுகு மரங்கள், ஓங்கி - உயர்ந்து, எங்கும் - எவ்விடத்தும், பன்மாடம் நெருங்கி - பலமாடங்கள் செறிந்து, வாளை உடை புனல் - வாளை மீன்கள் தன்னிடத்து இருக்கப்பெற்ற நீரானது, வந்து எறி - வந்து அலைவீசுகின்ற, வாழ்வயல் - வளம்பொருந்திய வயல்களையுடைய, தில்லை தன்னுள் - தில்லைத் திருப்பதியில், ஆள உடை - உயிர்களை யாளும்பொருட்டு, கழல்- திருவடியினைக் கொண்ட, சிற்றம்பலத்து அரன் - சிற்சபையில் எழுந்தருளிய சிவபெருமானது, ஆடல் கண்டால் - திரு நடனத்தைத் தொழுதால், பேய்த்தொண்டர் - பேய்த்தன்மை வாய்ந்த திருத்தொண்டர், பீளைஉடை கண்களால் - பீளையையுடைய கண்களைக் கொண்டு, பின்னை - பிறகு, காண்பது - காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.

**பொருவிடை ஒன்றுடைப் புண்ணிய மூர்த்தி புலியதளன்**
**உருவுடை அம்மலை மங்கை மணாளன் உலகுக்கெல்லாம்**
**திருவுடை அந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்**
**திருவடி யைக்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 2**

(ப - ரை) பொருவிடை ஒன்று உடை - போர் செய்கின்ற இடபம் ஒன்றினையுடைய, புண்ணியமூர்த்தி - புண்ணியத்தையே வடிவமாக உடையவனும், புலி அதளன் - புலித்தோலை ஆடையாக உடையவனும், உருஉடை - அழகினையுடைய, அ - அந்த, மலைமங்கை மணாளன் - பார்வதிதேவியாருக்கு நாயகனும் ஆகிய, உலகுக்கு எல்லாம் - எல்லா உலகுக்கும், திருவுடை அந்தணர் - முத்திச் செல்வத்தையுடைய அந்தணர்கள், வாழ்கின்ற - வசிக்கின்ற, தில்லைச் சிற்றம்பலவன் - தில்லைத் திருச்சிற்றம்பலத் தெழுந்தருளிய இறைவனது, திருவடியைக் கண்ட - திருவடிகளைத் தரிசித்த, கண்கொண்டு - கண்களால், மற்று - வேறு, இனி - மேல், காண்பது - காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங்கொண் டெப்பொழுதும்**
**அடுத்து வணங்கும் அயனொடு மாலுக்கும் காண்பரியான்**
**பொடிக்கொண் டணிந்துபொன் னாகிய தில்லைச்சிற் றம்பலவன்**
**உடுத்த துகில்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 3**

(ப - ரை) தொடுத்தமலர் ஒடு - தொடுக்கப்பட்ட மலர் மாலைகளோடு, தூபமும் சாந்தும் கொண்டு - நறும்புகையும் சந்தனமும் கைக்கொண்டு, எப்பொழுதும் - எப்போதும், அடுத்து வணங்கும் - நெருங்கி வழிபடுகின்ற, அயன் ஒடு மாலுக்கும் - பிரம விட்டுணுக்களுக்கும், காண்பு அரியான் - காணுதற்கரியவனும், பொடிகொண்டு அணிந்து - திருநீற்றினால் திருமேனியைச் சண்ணித்து, பொன் ஆகிய - பொன்னால் வேய்ந்து முற்றிய, தில்லை சிற்றம்பலவன் - தில்லைத் திருச்சிற்றம்பலத்தை யுடையவனுமாகிய இறைவனது, உடுத்த துகில் - அணிந்த திருவாடையை, கண்ட - தரிசித்த, கண்கொண்டு - கண்களால், மற்று - வேறு, இனி - மேல், காண்பது - காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.

**வைச்ச பொருள்நமக் காகுமென் றெண்ணி நமச்சிவாய**
**அச்ச மொழிந்தேன் அணிதில்லை அம்பலத் தாடுகின்ற**
**பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி உந்தியின் மேலசைத்த**
**கச்சின் அழகுகண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே. 4**

(ப - ரை) நமச்சிவாய - 'நமச்சிவாய' என்னும் திருவைந்தெழுத்து, நமக்கு - பற்றுக்கொ டொன்றுமில்லாத எங்களுக்கு, ஆகும் - உற்றவிடத் துதவும், வைச்சபொருள் - வைப்புப்பொருள், என்று எண்ணி - என்று நிச்சயித்து, அச்சம் ஒழிந்தேன் - பிறவிப் பயம் ஒழியப்பெற்றேன், அணி - அழகிய, தில்லை அம்பலத்து - தில்லைத் திருச்சிற்றம்பலத்து, ஆடுகின்ற - திருக்கூத்தாடுகின்ற, பிச்சன் - பித்தனும், பிறப்பு இலி - பிறப்பில்லாதவனும், பேர் நந்தி - பெரிய நந்தி யென்னும் திருநாம முடையவனும் ஆகிய இறைவன், உந்தியின்மேல் - திருவுந்தியின் மேல், அசைத்த - கட்டிய, கச்சின் - கச்சையினது, அழகு - அழகினை, கண்டால் - பார்த்தால், பின்னை - பிறகு, கண்கொண்டு - கண்களால், காண்பது - காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.

**செய்ஞ்ஞின்ற நீலம் மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்**
**மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க**
**நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்**
**கைஞ்ஞின்ற ஆடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே. 5**

(ப - ரை) செய்ஞ்ஞின்ற - வயல்களிற்றங்கிய, நீலம் - கருங்குவளைகள், மலர்கின்ற - மலர்ந்து கமழ்கின்ற, தில்லைச் சிற்றம்பலவன் - தில்லைத் திருச்சிற்றம்பலத்து எழுந்தருளியவனும், நெய்ஞ்ஞின்று எரியும் - நெய்தங்கி எரிகின்ற, விளக்கு ஒத்த - விளக்கொளி யொத்த, நீலமணி மிடற்றான் - நீலமணி போலும் திருமிடற்றினையுடையவனுமாகிய இறைவன், மைஞ்ஞின்ற - மைதீட்டிய, ஒண்கண் - அழகிய கண்களையுடைய, மலைமகள் - உமாதேவியார், கண்டு - தொழுது, மகிழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க - களிகொண்டிருக்க, கைஞ்ஞின்ற - இடக்கரத்தால் தூக்கிய திருவடியைக் காட்டி நிற்கின்ற, ஆடல் - திருநடனத்தை, கண்டால் - தொழுதால், பின்னை - பிறகு, கண்கொண்டு - கண்களால், காண்பது - காணத்தக்கது, என்னே - வேறு யாதுளது என்றவாறு.

**ஊனத்தை நீக்கி உலக றியஎன்னை ஆட்கொண்டவன்**
**தேனொத் தெனக்கினி யான்தில்லைச் சிற்றம் பலவன் எங்கோன்**
**வானத் தவருய்ய வல்நஞ்சை உண்டகண் டத்திலங்கும்**
**ஏனத் தெயிறுகண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே. 6**

(ப - ரை) ஊனத்தை நீக்கி - எனக்குற்றதாகிய குறைபாட்டை நீங்கும்படி செய்து, உலகு அறிய - உலகினர் யாவரும் அறியும்படி, என்னை - ஒன்றுக்கும் பற்றாத எளியேனை, ஆட்கொண்டவன் - ஆட்கொண்டருளியவனும், தேன் ஒத்து - தேன் போன்று, எனக்கு - அடியேனுக்கு, இனியான் - இன்பத்தைத் தருபவனும், தில்லைச் சிற்றம்பலவன் - தில்லைத் திருச்சிற்றம்பலத் தெழுந்தருளியவனும், எம்கோன் - எம் தலைவனும் ஆகிய இறைவன், வானத்தவர் உய்ய - தேவர்கள் சாவாது பிழைக்கும்படி, வல் நஞ்சை - கொடிய விடத்தை, உண்ட - உண்டருளிய, கண்டத்து - திருநீலகண்டத்தில், இலங்கும் - விளங்குகின்ற, ஏனத்து எயிறு - பன்றிக் கொம்பினை, கண்டால் - தரிசித்தால், பின்னை - பிறகு, கண்கொண்டு - கண்களால், காண்பது - காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.

**தெரித்த கணையால் திரிபுர மூன்றுஞ்செந் தீயின்மூழ்க**
**எரித்த இறைவன் இமையவர் கோமான் இணையடிகள்**
**தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்**
**சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 7**

(ப - ரை) தெரித்த - தேர்ந்தெடுத்த, கணையால் - அம்பினால், திரிபுரம் மூன்றும் - வானிலே திரியாநின்ற மூன்று புரங்களையும், செந்தீயில் மூழ்க - செந்நிறமுள்ள தீயில் மூழ்குமாறு, எரித்த - எரித்தருளிய, இறைவன் - தலைவனும், இமையவர் கோமான் - தேவர்கள் பெருமானும், இணை அடிகள் - தம் இரண்டு சேவடிகளையும், தரித்த - தாங்கிய, மனத்தவர் - மனத்தினை உடைய அடியவர், வாழ்கின்ற - வசிக்கின்ற, தில்லைச் சிற்றம்பலவன் - தில்லைத் திருச்சிற்றம்பலத்து எழுந்தருளியவனும் ஆகிய இறைவனது, சிரித்த முகம் - புன்னகை புரியும் திருமுகத்தை, கண்ட - தரிசித்த, கண்கொண்டு - கண்களால், இனி - மேல், மற்று - வேறு, காண்பது - காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.

**சுற்றும் அமரர் சுரபதி நின்திருப் பாதம் அல்லால்**
**பற்றொன் றிலோமென் றழைப்பப் பரவையுள் நஞ்சை உண்டான்**
**செற்றங் கனங்கனைத் தீவிழித் தான்தில்லை அம்பலவன்**
**நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 8**

(ப - ரை) சுற்றும் - நாற்புறமுஞ் சூழ்ந்த, அமரர் - தேவர்களும், சுரபதி - அவ்வமரர் தலைவனாகிய இந்திரனும், நின் - தேவரீரது, திருப்பாதம் அல்லால் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருவடியை அல்லாமல், பற்று ஒன்று இலோம் - பிறிதொரு துணை உடையோ மல்லோம், என்று அழைப்ப - என்று முறையிட்டழைக்க, பரவையுள் நஞ்சை - கடலிலெழுந்த நஞ்சினை, உண்டான் - உண்டருளினவனும், அங்கு - முன்பு திருக்கயிலாயத்தில், அநங்கன் - மன்மதன், செறு - செறும்படி, தீ விழித்தான் - அனற்கண்ணைத் திறந்தருளினவனும், தில்லை அம்பலவன் - தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளினவனுமாகிய இறைவனது, நெற்றியில் கண் - நெற்றிக்கண்ணை, கண்ட - தரிசித்த, கண்கொண்டு - கண்களால், இனி - மேல், மற்று - வேறு, காண்பது - காணத்தக்கது, என்னே - யாது உளது என்றவாறு.

**சித்தத் தெழுந்த செழுங்கம லத்தன்ன சேவடிகள்**
**வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்**
**முத்தும் வயிரமும் மாணிக்கம் தன்னுள் விளங்கியதூ**
**மத்த மலர்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 9**

(ப - ரை) சித்தத்து - அன்பரது மனத்தகத்து, எழுந்த - பூத்த, செழுங் கமலத்து அன்ன - செழுவிய தாமரைமலரினை ஒத்த, சேவடிகள் - செவ்விய திருவடிகளை, வைத்த - எழுந்தருளச் செய்த, சேவடிகள் - செவ்விய திருவடிகளை, வைத்த - எழுந்தருளச் செய்த, மனத்தவர் - மனத்தினை உடையவர்கள், வாழ்கின்ற - வதிகின்ற, தில்லைச் சிற்றம்பலவன் - தில்லைத் திருச்சிற்றம்பலத் தெழுந்தருளிய இறைவனது, முத்தும் வயிரமும் - முத்தும் வயிரமுமாகிய இவை, மாணிக்கம் தன்னுள் - மாணிக்கத்தினிடத்து, விளங்கியது - மிளிர்ந்தாலொத்த, ஊமத்தமலர் - ஊமத்த மலரினை, கண்ட - தரிசித்த, கண்கொண்டு - கண்களால், இனி - மேல், மற்று - வேறு, காண்பது - காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.

**தருக்கு மிகுத்துத்தன் தோள்வலி உன்னித் தடவரையை**
**வரைக்கைக ளாலெடுத் தார்ப்ப மலைமகள் கோன்சிரித்து**
**அரக்கன் மணிமுடி பத்தும் அணிதில்லை அம்பலவன்**
**நெருக்கி மிதித்த விரல்கண்ட கண்கொண்டு காண்பதென்னே. 10**

(ப - ரை) தருக்கு மிகுத்து - செருக்குமிக்கு, தன்தோள்வலி - தனது புயவலியை, உன்னி - அதிகமாக எண்ணி, தட வரையை - பெரிய திருக்கைலாய மலையை, வரைக்கைகளால் - மலைபோன்ற திண்ணிய கைகளால், எடுத்து - பெயர்த் தெடுத்து, ஆர்ப்ப - ஆரவாரஞ் செய்ய, மலைமகள் கோன் - பார்வதிக்கு நாயகனாகிய, அணிதில்லை அம்பலவன் - அழகிய தில்லைத் திருச்சிற்றம்பலவன், சிரித்து - நகைத்தெள்ளி, அரக்கன் - அவ்விராவணனது, மணிமுடி பத்தும் - கிரீடமணிந்த தலைகள் பத்தையும், நெருக்கி - மலையின்கீழ் அழுத்தி, மிதித்த - மிதித்தருளிய, விரல் - திருவிரல்களை, கண்ட - தரிசித்த, கண் கொண்டு - கண்களால், காண்பது - காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.

திருச்சிற்றம்பலம்

உரைக்குறிப்பு : கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார்.
உதவியவர் : வ. பேரின்பநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி

# சைவசமய விழுமியங்கள்

3.) **திருவைந்தெழுத்து** : மந்திரங்கள் யாவற்றிற்கும் தலையான மந்திரம் திருவைந்தெழுத்து என்னும் பஞ்சாட்சரமந்திரமாகும். இது இம்மைக்கும் மறுமைக்கும் துணையாய்நிற்பது.

"முந்தை முதல் மந்திரங்கள் எல்லாந் தோன்றும்
முதல்வனாம் எழுத்து அஞ்சு என்பார்" சேக்கிழார் பெருமான்.
(பெரியபுராணம் - சம்பந்தர்புராணம் - 261)

ஐந்தெழுத்து வடிவமாகவே சிவபெருமான் உள்ளதால் அவன் நாமமாகவும் ஐந்தெழுத்து அமைந்துள்ளதாக அருளாளர்கள் கூறியுள்ளனர்.

"நாதன் நாமம் நமச்சிவாயவே" (3.49.1)
என்று சம்பந்தப்பெருமானும்,

"படைக்கலமாக உன் நாமத்து எழுத்தஞ்சு
என்நாவிற் கொண்டேன்" (4.81.8)

என்று அப்பர் பெருமானும் கூறிய அருள் வாக்குகளால் அறியலாம். திருவைந்தெழுத்து 'நமசிவாய' என்ற தூலபஞ்சாட்சரம், 'சிவாயநம' என்ற சூக்கும பஞ்சாட்சரம் என இருவகைப்படும். தூலபஞ்சாட்சரம் உலக இன்பம் நாடுவோருக்கு உரியது; லௌகிகம் சம்பந்தமானது. சூக்கும பஞ்சாட்சரம் ஆன்மிகம் சம்பந்தமானது; முத்திகாமிகளுக்குரியது. இது

சூக்கும பஞ்சாட்சரம் - சிவாயநம
அதிசூக்கும பஞ்சாட்சரம் - சிவயசிவ
காரண பஞ்சாட்சரம் - சிவய
மகாகாரண பஞ்சாட்சரம் - சிவ
மகாமநு - சி

என்று வகைப்படுத்தி மானதம், மந்தம், தீவிரம் (சுத்தமானதம்), தீவிரதரம் (உரை) என்ற முறையில் ஓதப்படுகிறது. சூக்கும பஞ்சாட்சரமான 'சிவாயநம' எவற்றைச் சுட்டுகிறதென்பதை சாத்திர நூல்கள் விளக்கியுள்ளன.

சி - சிவன்
வா - திருவருட்சத்தி
ய - உயிர்
ந - திரோதானசத்தி
ம - மலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத்தோதின் நாளும் அரனடிக்கு அன்பதாகும்". (4.70.5)

என்ற அப்பரின் வாக்குப்படி காலையும் மாலையும் தொடர்ந்து திருவைந்தெழுத்தை ஓதிவந்தால் திருவருள் கைகூடும் என்பது திண்ணம்.

4.) **சைவநாற்பாதங்கள்** : சைவசமய விழுமியங்களில் சைவநாற்பாதங்கள் வழி நின்றால் இறைவனை அடையலாம் என்பது அருளாளர்கள் காட்டிய உண்மையாகும். இவை சைவ நன்னெறிகள், சைவநாற்படிகள்,சிவ புண்ணியங்கள், சைவநான்மார்க்கங்கள் என்றும் கூறப்படுகின்றன. சரியை,கிரியை, யோகம், ஞானம் என்பவையே சைவ நாற்பாதங்களாகும்.

(1) சரியை : தாசமார்க்கம், அடிமை நெறியென்றும் கூறப்படும். அப்பரின் உழவாரத் தொண்டு இதன்பாற்படும்.
கிடைக்கும் முத்தி : சாலோபமுத்தி.

(2) கிரியை : சற்புத்திரமார்க்கம், மகன்மை நெறியென்றும் கூறப்படும். சம்பந்தரின் வழிபாட்டு முறை இதன்பாற்படும்.
கிடைக்கும் முத்தி : சாமீபமுத்தி.

(3) யோகம் : சகமார்க்கம், தோழமைநெறியென்றும் கூறப்படும். சுந்தரர் மேற்கொண்டநெறி இதன்பாற்படும்.
கிடைக்கும் முத்தி : சாரூபமுத்தி

(4) ஞானம் : சன்மார்க்கம் என்றும் கூறப்படும். மாணிக்கவாசகர் மேற்கொண்ட நெறி
கிடைக்கும் முத்தி : சாயுச்சியமுத்தி

5.) **விரதங்கள்** : விரதங்கள் அனுட்டிப்பதும் சமய விழுமியங்களில் முக்கியமான ஒன்றாகக்கருதப்படுகிறது. விரதம் என்பது தவம், நோன்பு என்றும் குறிப்பிடப்படும். "மனம் பொறிவழிப் போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும்" என்பார் நாவலர் பெருமான்.

**சிவவிரதங்கள்** : சிவராத்திரிவிரதம், சோமவாரவிரதம், திருவாதிரைவிரதம், உமாமகேசுரவிரதம், கேதாரகௌரிவிரதம், கலியாணசுந்தரர்விரதம், சூலவிரதம், இடபவிரதம் என்னும் எட்டும் சிவவிரதங்களாகும். பிரதோஷவிரதமும் சிவவிரதமாகும் என்று நாவலர் பெருமான் சைவ வினாவிடையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

**தேவிவிரதங்கள்** - சுக்கிரவாரவிரதம், ஐப்பசிஉத்தரவிரதம், நவராத்திரிவிரதம், என மூன்றாகும்.

**விநாயகவிரதங்கள்** - சுக்கிரவாரவிரதம், விநாயகசதுர்த்திவிரதம், விநாயகஷஷ்டிவிரதம் என மூன்றாகும்.

**சுப்பிரமணியவிரதம்** - சுக்கிரவாரவிரதம், கார்த்திகைவிரதம், கந்தஷஷ்டிவிரதம் என்னும் மூன்றுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைரவவிரதங்கள்** : மங்கலவாரவிரதம், சித்திரைப்பரணி, ஐப்பசிப்பரணி என்னும் மூன்றுமாம்..

**வீரபத்திர விரதம்** : வீரபத்திரருக்கு மங்கலவாரவிரதம் என்ற ஒன்றுமட்டுமே.

சைவத்தோடு தொடர்புடைய இவ்விரதங்களை அனுட்டிப்பதன் மூலம் சைவசமய வாழ்வு வாழ்ந்து இறையருள் பெறுவது என்பது உறுதியாகும்.

6.) **குரு லிங்க சங்கம வழிபாடு** :

**குரு** : இவர் பாசத்தை நீக்குபவர்; அஞ்ஞான இருளை அகற்றுபவர். தீட்சை அளிப்பவர் தீட்சாகுரு. கல்வி தருபவர் வித்தியாகுரு. சமயகுரவர்களும், சந்தான குரவர்களும் குருமார்களே. குருவை வழிபடக் குருபூசை செய்தல் சிறப்பானது. இறைவனே குருவாகவந்து அருளுவான். "அருபரத் தொருவன் அவனியில் வந்து குருபரனாகி அருளிய பெருமை" என்பார் மணிவாசகப் பெருமான். குருவருள் இன்றித் திருவருள் இல்லை என்பார் அறிவோர்.

**லிங்கம்** : சிவபெருமானின் அருவுருவத்திருமேனி சிவலிங்கமாகும். அது சோதிவடிவானது. சதாசிவம் எனப் போற்றப்படுவது. லிங்கவழிபாடு சைவசமய விழுமியங்களில் தலையானது. சிவலிங்க வழிபாட்டைச் செய்து பேறுபெற்றவர்கள் சண்டேசுர நாயனார், குங்கிலியக்கலய நாயனார் போன்றோர் ஆவர்.

**சங்கமம்** : சங்கமம் என்பது சிவனடியார் திருக்கூட்டம். சிவனடியார்களைச் சிவனாகவே நினைத்து, அவர்களைப் பணிந்து, பணிவிடைசெய்வது சைவசமய விழுமியங்களில் ஒன்றாக உள்ளது.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத்தொழுமே" (சிவஞானபோதம் - 12)

என்று கூறுகிறது சிவஞானபோதம்.

சங்கம வழிபாடு செய்து அருள் பெற்றவர்கள் அப்பூதியடிகள், இளையான் குடிமாறனார், சிறுத்தொண்டர் போன்றோர்ஆவர்.

சைவசமய விழுமியங்கள் மிக விசாலமானவை. ஒரு சிலவற்றையே இங்கு காட்சிப்படுத்தமுடிந்தது. விழாக்காணுதல் பண்டிகைகள் கொண்டாடுதல், புராணபடனம், கதாப்பிரசங்கம் செய்தல், திருமுறை முற்றோதல், பஞ்சபுராணம் பாடுதல், கூட்டுப்பிரார்த்தனை செய்தல், கோலம் போடுதல், பூமாலை புனைதல், தோரணம் செய்தல், அன்னசத்திரம் - ஆலயம் - இனிய நீர்த்தண் சுனைகள் அமைத்தல், ஏழைக்கு எழுத்தறிவித்தல் போன்ற இன்னோரன்னனவும் சைவசமய விழுமியங்களாகப் போற்றப்படுகின்றன. சைவசமய விழுமியங்களைக் கடைப்பிடித்து இறைஇன்பம் பெற்று மனித்தப் பிறவியின் நோக்கத்தை அடைந்துய்வோமாக.

சைவப்புலவர்,திருநெறிச்செல்வர்,சித்தாந்தரத்தினம், தர்மாசிரியர்.
சாமித்தம்பி பொன்னுத்துரை பீ.ஏ.(சிறப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ்ன் தொடர்ச்சி

உ

திருச்சிற்றம்பலம்

# காலத்தால் மிக முந்திய சித்தாந்த சாத்திரம்

## வாகீசமுனிவரின் ஞானாமிர்தம்

மத்தமயூர சந்தானத்தின் ஒரு கிளையினர் களச்சூரிவேந்தர் காலத்தில் அவர்கட்கு அரசகுருவாக இருந்துள்ளனர். அவர் வரிசையுள் **விமல சிவர்** தலைவராக நிற்கின்றார். அவர் மாணவருள் சாந்த சிவரென்பார் விசயசிம்மனுக்கும், பின்பு சேதிநாட்டை வென்று கொண்ட திரைலோக்கியமல்லனுக்கும் அரசகுருவாய் விளங்கினார். புருடசிவர் என்பார் யசகரணனுக்கும், சத்திசிவரென்பார் கயகரணனுக்கும், கீர்த்திசிவர் நரசிம்மனுக்கும், விமலசிவர் சயசிம்மனுக்கும் அரசகுரவர்களாய் இருந்தனர்.

இந்த மத்தமயூர சந்தானத்தின் மற்றொரு கிளையினர் களச்சூரி வேந்தரது தலைநகரான திரிபுரிக்கு அண்மையில் வீரகட்டம் (Bheraghat) என்னுமிடத்தே ஒரு மடத்தை நிறுவினர். அங்கே நருமதையாற்றங்கரையிலுள்ள **கோகழி**[1] என்ற சிறு குன்று ஒன்றின் மேல் அறுபத்து நான்கு யோகினிகளை நிறுவினர். அக் கோகழிக்குன்று கோளகிரி யென்னும் புண்ணியதலமென்றும் அது பண்டு தொட்டே வழங்கி வருவதென்றும் கூறுப. அக்குன்றிடத்தே நிறுவப்பட்ட மடம் பிற்காலத்தே **கோளகிரி மடம்** எனப் பெயர் மாறியது. அதுவே பின்பு நாளடைவில் மருவிக் **கோளகி மடம்** என வழங்குவதாயிற்று. மால்காபுரம் கல்வெட்டு "இக் கோளகி மடம் நருமதைக்கும் பாகீரதிக்கும் இடையிலுள்ள தவள மண்டலத்தில் உளது என்று கூறுகிறது.[2] சபல்பூருக்கு அருகில் இருக்கும் **தேவார்** என்பது பண்டைநாளில் களச்சூரிவேந்தர்க்குத் தலைநகரமாக இருந்த **திரிபுரி** என்பதாகும்; அதனை நடுவே கொண்ட பகுதி தவளமண்டலம்; வீரகட்டமும் அவ்விடத்தேயுளது; ஆதலால் ஆங்குள்ள கோளகிரியே கோளகியாதல் வேண்டும்."[3] என ஆராய்ச்சியாளர் கூறுவர்.

இனி, இக் கோளகி மடத்தை நிறுவிய மத்தமயூர சந்தானத்தவருள் முதல்வர் **துருவாசர்** என்போராவர். அவர் வழிவந்தவர் **சற்பவ சம்பு** என்ற சைவாசிரியர். அவருக்குப் பிட்சா விருத்தியாகக் களச்சூரி வேந்தனான முதல் யுவராஜ தேவன் **மூன்று லக்ஷம்** என்ற பகுதியைக் கொடுத்தான். அவர்பால் சைவாசிரியர் பலர் இருந்து சைவப்பணி புரிந்தனர். அவர் வழியில் **சோம சம்பு சிவாசாரியார்** தோன்றினார். **சோமசம்புபத்ததி** என்ற நூலை எழுதியவர் அவரேயாவர். அவர்க்குப் பின் **வாம சம்பு** என்பார் கோளகி மடத்துத் தலைவராக விளங்கினார். அவர்க்கு ஆயிரக்கணக்கில் மாணவருண்டென்றும், அவர் தமது பார்வையினாலே உலகாளும் வேந்தரை ஆக்கவும் அழிக்கவும் வல்லவரென்றும் வரலாறு கூறுகிறது. அவர் வழியில் வந்து சிறந்தோருள் **விமலசிவர்** என்பார் கேரள நாட்டினர். விமல சிவரைக் களச்சூரி வேந்தர்கள் சிவனெனவே தேறி வழிபட்டனர். இவர் வழியில் வந்தோருள் **விசுவேசுர சம்பு** கௌட தேசத்து ராதை நாட்டுப் பூருவ கிராமம் என்னும் பகுதியில் இருந்தவர். கணபதிவேந்தனுக்குத் தீக்கை செய்தவர் இவரே. இவர்பால் களச்சூரி வேந்தர்களேயன்றி, மாளவ வேந்தரும் சோழ வேந்தரும் சிவதீக்கை பெற்றார்கள்.[4] இவ்வேந்தருள் களச்சூரி கணபதி வேந்தன் தன்னை **விசுவேசுர சம்பு**வின் புதல்வனென்றே கூறிக்கொள்ளுகின்றான். அவரது ஆணை வழிநின்று, பற்பல சைவாசிரியர்களையும் புலவர்களையும் வருவித்து அவ்வேந்தன்

[1] A. R. No. 278, 316 of 1925
[2] Indian Historical Quarterly Vol. xxvi. P.1-16.
[3] A. R. No. 94 of 1917.
[4] A. R. for 1917 part 11 para 33 : 223 and 272 of 1905

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த பரிசில் நல்கினான். "காதிற் குண்டலம் இலங்க, முடியில் சடை கிடந்து தாழ, ஒளிதிகழும் முகமும், மணிமாலை கிடந்தசையும் மார்பும் கொண்ட **விசுவேசுர சம்பு**, கணபதி வேந்தன் அரண்மனையில் வித்தியா மண்டபத்தில் வீற்றிருக்கும் காட்சி காண்பார் கண்களுக்கு நல் விருந்தாகும்" என்ற பொருளமைந்த வடமொழிச் செய்யுளொன்று காணப்படுகிறது.[1]

கணபதி தேவ மகாராயர் விசுவேசுரர் செய்யும் சமயப்பணியின் பொருட்டு மந்தரம் என்னும் ஊரைக் கொடுக்க வேண்டுமென விரும்பியிருந்தார். அவர் இறந்தபின் அவர் புதல்வியான **இராணி உருத்திராதேவி** அரசு கட்டிலேறினாள். அவட்கும் அவ்விசுவேசுரர் ஞானசிரியராக இருந்தார். கி. பி. 1261 இல் அவருக்கு உருத்திராதேவி தன் தந்தையார் விரும்பியவாறே **மந்தரம்** என்ற ஊரையும் அதன் அருகில் உள்ள தீவுகளையும் (இலங்கைகள்) வழங்கினாள்; தனியாகத் தனது பெயரால் விசுவேசுரர்க்கு விளங்காப்பூண்டி (வெலகபூடி) என்ற ஊரையும் கொடுத்தாள்.

மந்தரம் என்னும் ஊர் இப்போது **மண்டடம்** என வழங்குகிறது. இவ்வூரில் விசுவேசுவரர், கோயில் ஒன்றும் மடம் ஒன்றும் அறவுணவுச் சாலையொன்றும் கட்டினார். பின்பு, தமிழ் நாட்டிலிருந்து அறுபது பிராமணக் குடும்பங்களை வருவித்து, மந்தரம் விளங்காப்பூண்டி என்ற இரண்டு ஊர்களிலும் குடியேற்றி அவ்வூர்க்குக் **கோளகி** யென்று பெயரும் இட்டார். ஒவ்வொரு குடும்பத்தார்க்கும் வேண்டுமளவு நிலம் விட்டு விற்கவும் ஒற்றி வைக்கவும் வேண்டிய முழுவுரிமையும் நல்கினார். எஞ்சிய நிலங்களை மூன்று கூறு செய்து ஒன்றைக் கோயிலுக்கும் ஒன்றைக் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மடத்திலிருக்கும் சைவர்களுக்கும் மூன்றாம் கூற்றை மருத்துவச் சாலைக்கும் அறவுணவுச் சாலைக்குமாகப் பங்கீடு செய்தார். கோளகி சந்தானத்தார் வடமொழி வாயிலாகவே சமயப்பணி செய்தவராதலால், இருக்கு முதலிய வேதங்களைக் கற்பிக்க மூவர் ஆசிரியர்களும், தருக்கம், சாகித்தியம், ஆகமம் என்ற இவற்றைக் கற்பிக்க ஆசிரியர் ஐவரும் மருத்துவர் ஒருவரும் கணக்கர் ஒருவருமாகப் பதின்மூன்று பேர் நிறுவப் பெற்றனர். ஒவ்வொருவர் வாழ்க்கைக்கும் நிலங்கள் ஒதுக்கப்பட்டன. கோயில்களில் இசைவாணர் முதல் ஊர்ப்பணி செய்யும் நாவிதர், ஊர்காக்கும் வயிராகியர் ஈறாக எழுபத்து மூவர் இருந்தனர். இவர்களும் தலைக்கொரு புட்டி நிலம் தரப்பெற்றனர். புட்டி என்பது அக்காலத்தே அப்பகுதியில் வழங்கிய நிலவளவை. **உணவுச் சாலையில் சாதி வேறுபாடு கருதாமல் பிராமணர் முதல் சண்டாளர் ஈறாக யாவர்க்கும் உணவு நல்குமாறு விசுவேசுரர்** ஏற்பாடு செய்தார். அவர் குடியேற்றிய தமிழ்ப் பிராமணர்களைத் **திராவிடப் பிராமணர்** என இப்போதும் அங்குள்ள மக்கள் வழங்குகின்றனர்.

அவர் செய்த செயல்வகைகளில், காளீஸ்வரத்தில் உபலமடம் என்றொரு மடத்தை நிறுவி அதற்குத் தான் ஏற்படுத்திய பொன்ன காமம் என்னும் அக்கிரகாரத்தை அளித்ததும், மந்தர கூடத்தில் விசுவேசுரலிங்கம் என்ற கோயிலை நிறுவி அதன் நிருவாகத்துக்கும், தான் அங்கே ஏற்படுத்திய உணவுச் சாலையின் பொருட்டு மானப்பள்ளி, ஊட்டுப்பள்ளி என்ற ஊர்கள் இரண்டினைக் கொடுத்ததும், சந்திரவல்வி நகரத்தில் சிவன் கோயிலொன்றைக் கட்டிக் கம்பம்பள்ளியேரியின் கரையை விரிவுபடுத்தி அதன் வருவாயில் செம்பாதியை அக்கோயிலுக்கு உரிமை செய்ததும், அனந்தபாத நகரத்தில் சிவன்கோயிலொன்றை எடுத்து அந்நகரத்துக்கு விசுவேசுர நகரம் என்று பெயரிட்டு, அக்கோயிலுக்கு அனந்தபுரம், முனிகூடம் என்ற ஊர்களைத் தேவதானமாக வழங்கியதும், கொம்மு கிராமம் ஏலீசுரபுரம், நிவிருத்தி முதலியவூர்களில் சிவன் கோயிலும் அறவுணவுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[2] A. R. for 1917 para 35-8

சாலையும் ஏற்படுத்தியதும் உணவுச்சாலையில் சாதி சமுதாய வேற்றுமை சிறிதும் இன்றிப் பிராமணர் முதல் சண்டாளர் ஈறாக எல்லார்க்கும் ஒப்ப உணவும் கல்வியும் ஒழுக்கமும் நல்கியதும் பிறவும் சிறந்தனவாகும்.[1]

உணவால் உயிர்களின் பசிப்பிணியும், மருத்துவத்தால் உடற்பிணியும், சிவஞானத்தால் பிறவிப்பிணியும் நீக்கும் இனிய தொண்டுகளைச் செய்தமையால் இக்கோளகி சந்தானம் நாட்டில் நல்ல செல்வாக்கினைப் பெற்றது. இச் சந்தானத்தில் விளங்கியோர் சிறந்த சிவஞானிகளாதலால் சாதி சமய வேற்றுமை கருதாது தங்கள் தொண்டினை ஆற்றி வந்தனர். அவருள் **உருத்திரசிவர்** என்பார் சைவசித்தாந்தமேயன்றிப் பௌத்த சமயத்துத் **திக்கநாகர்** முதலியோர் எழுதிய நூல்களில்[2] வல்லுநராய் இருந்தனர். பிரசண்டசிவர் என்பார் **பஞ்சார்த்தக சித்தாந்தம்** (பாசுபதம்) வல்லுநர்[3]; வியோமசிவர் பிரசத்தபாதருடைய வைசேடிய பாடியத்துக்கு [4]வியோமவதி என்னும் விளக்கவுரை கண்டார் அதனால், விசுவேசுரருடைய கல்விச்சாலையில் பாசுபதர் முதலிய பிற சமயத்தவரும் கல்வி பயின்றனர். புறச்சமயங்கள் சைவத்துக்குப் படிமுறையில் அமைந்தனவாதலின், அவற்றை இகழ்ந்து புறக்கணித்தல் சைவத்துக்கு மாறானது என்ற சைவவொழுக்கம்பற்றி, இச் சான்றோர்கள் சாதி வேற்றுமையும் சமயவேற்றுமையும் கருதாராயினர் என அறிக. பிற்காலச் சைவர்கள் சாதிசமய வேற்றுமைக்குழியில் வீழ்ந்து, **நீறுபூசும் தம் திருமேனியில் சேறுபூசிக்கொண்டமையின், இன்று கண்டார் இகழ்ந்து பழிக்கும் சிறுமையுற்றது மேலேகூறிய சைவநெறியைக் கைவிட்டமையாலாகும்.**

அஃது அவர்கள் பொதுவாக மேற்கொண்டிருந்த அறமாயினும், சைவசித்தாந்தக் கருத்துக்களை மக்கட்கு அறிவுறுத்துவது சிறந்த அறமாகக்கொண்டிருந்தனர். தங்கள் காலத்திலும் தங்களது முன்னோர்காலத்திலும் வாழ்ந்த வேத நூல் வழிநின்ற வைதிகர்களும் பிறராகிய பௌத்த சமணச் சான்றோர்களும் வடமொழிகளையே சமயப்பணியில் மேற்கொண்டிருந்தமையின் கோளகி சந்தானத்துச் சான்றோர்களும் வடமொழியினையே மேற்கொண்டு சைவநூல்கள் பல செய்து உள்ளனர். **சோமசம்பு பத்ததி** யென்று இக்காலத்துச் சைவ நன்மக்களிடையே சிறப்பாகக் கொள்ளப்பட்டிருக்கும் நூலை எழுதிய **சோமசம்பு சிவாசாரியார்** இக்கோளகி மடத்தைச் சேர்ந்தவர். இவருள் ஈசான சிவயோகீந்திரர் என்பார் [5]**சித்தாந்த பத்ததி** யென்ற இனிய நூலையெழுதினார். **ஸ்நபன சாராவளி** எழுதிய பஞ்சாட்சர குருவும் **சித்தாந்த சாரம்** எழுதிய ஈசான சிவரும் **சித்தாந்த ரத்னாகரம்** எழுதிய சோமேசுரரும், **ஆத்மார்த்த பூஜாவிதி** எழுதிய வேதஞானசிவரும் இச்சந்தானத்தில் வந்த சான்றோராவர். **சித்தாந்தசார** ஆசிரியரான ஈசான சிவரே **ரத்னாகரம்** எழுதியவரென்றும், சோமேசுரரென்பது அவரது சிறப்புப் பெயரென்றும் கூறுவர். அவர் **சைவதரிசனம்** வல்லுநரென்றும், பதினெண் வித்தைகளும் பயின்றவரென்றும், வேதாந்த நூல்களாகிய உபநிடதங்களைக் கொண்டே சிவபரத்துவத்தை நிலையிட்டுக் காட்டின ரென்றும் **கிரணா கிரமத் ஜ்யோதிகா** எழுதிய ஈசான சிவர் ஆமர்த்தக சந்தானத்தைச் சேர்ந்தவராதலின் அவர் வேறு என்றும் [6]**சென்னைக் கல்வெட்டுத்துறை ஆண்டறிக்கை** கூறுகிறது. கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிப் **பதினெண்பத்ததிகளை**யும் மிருகேந்திர விருத்திக்குத் தீபிகையையும் தத்துவ தீபிகை தத்துவசங்கிரகம் முதலிய நூல்கட்கு உரையையும் எழுதிய **அகோர சிவாசாரியாரும்** இந்தக் [7]**கோளகி சந்தானத்தவரே**யெனக் கல்வெட்டுக் கூறுகிறது.

தொடரும்..

[1] A. R. for 1917 para. 33 to 38
[2] Ep Indi Vol. i p. 36
[3] Ibid Vol. xxiii p. 131
[4] Ind. Hist. Quarterly. Vol. xxvi. p. 16
[5] A. R. for 1913 para. 55
[6] A. R. for 1908 para. 64
[7] A. R. No. 303 of 1905

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவிற் கொள்வதற்குரிய வழிபாட்டு நாட்கள்
## துர்முகி வருடம் பங்குனி மாதம் -2017

| தமிழ்த் திகதி | ஆங்கிலத் திகதி | கிழமை | விரதம் |
|---|---|---|---|
| 01 | 14-03-2017 | செவ்வாய் | மாதப்பிறப்பு |
| 03 | 16-03-2017 | வியாழன் | சங்கடஹரசதுர்த்தி |
| 12 | 25-03-2017 | சனி | சனிப் பிரதோஷ விரதம் |
| 13 | 26-03-2017 | ஞாயிறு | தண்டியடிகள் குருபூசை |
| 14 | 27-03-2017 | திங்கள் | அமாவாசை விரதம் |
| 18 | 31-03-2017 | வெள்ளி | சதுர்த்தி விரதம்,<br>கார்த்திகை விரதம் |
| 19 | 01-04-2017 | சனி | நேசர் குருபூசை |
| 21 | 03-04-2017 | திங்கள் | கணநாதர் குருபூசை |
| 23 | 05-04-2017 | புதன் | முனையடுவார் குருபூசை |
| 26 | 08-04-2017 | சனி | சனிப் பிரதோஷ விரதம் |
| 27 | 09-04-2017 | ஞாயிறு | பங்குனி உத்தரம் |
| 28 | 10-04-2017 | திங்கள் | பூரணை விரதம் |
| 30 | 12-04-2017 | புதன் | காரைக்கால் அம்மையார் குருபூசை |
| 31 | 13-04-2017 | வியாழன் | இரவு 12.48 இற்கு ஏவிளம்பி<br>வருடப்பிறப்பு<br>விஷு புண்ணியகாலம்<br>இரவு 8.48- 4.42 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏவிளம்பி வருடம் சித்திரை மாதம்

| தமிழ்த் திகதி | ஆங்கிலத் திகதி | கிழமை | விரதம் |
|---|---|---|---|
| 01 | 14-04-2017 | வெள்ளி | ஏவிளம்பி வருடப்பிறப்பு<br>சங்கடஹரசதுர்த்தி விரதம் |
| 07 | 20-04-2017 | வியாழன் | நடேசரபிஷேகம் |
| 09 | 22-04-2017 | சனி | திருதிருநாவுக்கரசர் குருபூசை |
| 11 | 24-04-2017 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| 13 | 26-04-2017 | புதன் | அமாவாசை விரதம் |
| 14 | 27-04-2017 | வியாழன் | சித்திரைப் பரணி,<br>கார்த்திகை விரதம்,<br>மங்கையர்க்கரசியார் குருபூசை |
| 18 | 01-05-2017 | திங்கள் | ஷஷ்டி விரதம்,<br>விறன்மிண்டர் குருபூசை |
| 24 | 07-05-2017 | ஞாயிறு | உமாபதி சிவாசாரியார் குருபூசை |
| 25 | 08-05-2017 | திங்கள் | பிரதோஷ விரதம்,<br>இசைஞானியர் குருபூசை |
| 26 | 09-05-2017 | செவ்வாய் | சித்திரைச் சித்திரை |
| 27 | 10-05-2017 | புதன் | சித்திரைப் பூரணை விரதம்<br>திருக்குறிப்புத்தொண்டர் குருபூசை |
| 31 | 14-05-2017 | ஞாயிறு | சங்கடஹரசதுர்த்தி விரதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீர்த்தயாத்திரை 2017. சென்றோர, துறைசை ஆதீன 24ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள், பயிற்சிமைய இயக்குனர்,விரிவுரையாளர்கள்.

# இந்திய யாத்திரை

## தென்னிந்திய யாத்திரை

02.04.2017 தொடக்கம் 12.04.2017 வரை

திருவனந்தபுரம் பத்மசுவாமி கோயில், சுசீந்திரம், கன்னியாகுமரி, திருச்செந்தூர், இராமேஸ்வரம், மதுரை, பழனி, திருச்சி, கும்பகோணம், மயிலாடுதுறை, சிதம்பரம், மேல்மருவத்தூர், சென்னை, காளகஸ்தி, திருப்பதி.

(நவக்கிரக தலம், ஆறுபடை வீடு உட்பட)

## வட இந்திய யாத்திரை

05.08.2017 தொடக்கம் 16.08.2017 வரை

சென்னை, புதுடெல்லி, ஆக்கிரா (தாஜ்மகால்), ஹரித்துவார், ரிஷிகேஷ், அலகாபாத், அயோத்தி, வாரணாசி (காசி), கயா, புத்தகயா, இராமேஸ்வரம், சென்னை.

(தங்குமிடம், உணவு உட்பட)

தொடர்புகளுக்கு : திரு. க. சபாபதி
தொலைபேசி: 071 205 5255, 077 900 8286
சென்னை : 00 91 996 295 8002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீர்த்தயாத்திரை 2017. சைவத்திருமுறை, சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத்தில் 2016 இல் பயின்று திருமுறைநெறிச்செல்வர்,சித்தாந்தரத்தினம் பட்டம் பெற்றவர்கள், துறைசை ஆதீன 24ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள், பயிற்சிமைய இயக்குனர்,விரிவுரையாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org